உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துன்மதி ஆண்டு தைத்திங்கள் 10-2-82 [இதழ் 3

தருமையாதீனம்

25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்



காசி ஸ்ரீ விசுவநாதருக்குப் பாலாபிஷேகம் செய்து வழிபடுதல்.

(சிவராத்திரி நினைவாக வெளியிடுகிறோம்.)

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

| மலர் 41 | 10-2-82 | இதழ் 3 |

உட்பொருள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

.. [☆] ...

தேகாதி எல்லாஞ்
சடம்பிணம்பொய்என்றிருக்க
யோகாதி எல்லாம்
முடிந்திருக்க — ஏகமாய்
எப்போதும் இன்பவெள்ளத்
தேயிருக்க வாழ்வைஎன்னுள்
அப்போதே சொக்கநா தா.

— சொக்கநாத வெண்பா. 85

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 23
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ

குருபாதம்

தருமையாதீனம் சமய வளர்ச்சித் திங்கள் இதழ்

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் 'ஞானசம்பந்தம்' கற்போர் மனத்தைக் கவரும் சிறந்த திங்கள் இதழாகும். சமயம், இலக்கணம், இலக்கியம். மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்கள், எதிர்காலம் ஆகியவற்றுடன் வெளிவருவது. சமய உணர்வுகளை உணர்த்துவதற்குரிய அரிய இவ்விதழ் 40 ஆண்டுகள் நிறைவுபெற்று 41 ஆம் ஆண்டில் அடியெடுத்துவைக்கிறது.

சந்தாதாரர்கள் மறவாமல் ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதியதாகச் சேர்வோர் பின்வரும் முகவரிக்கு ரூ. 10. அனுப்பிப் பெற்றும் படித்துப் பயன் அடையலாம்.

இவ்வறிவிப்புப்படி மலர் ஆரம்பத்தில் பணம் அனுப்பாமல் பிறகு நிறுத்தப்பட்டபின் கடிதம் எழுதுவதைத் தவிர்க்கவே முன் இரண்டு இதழ்களிலும் ஞாபகப்படுத்தியும் இன்னும் சந்தாத் தொகைகள் பெறப்படவில்லை. இவ்விதழ்மூலம் நினைவூட்டுகின்றோம். **தனி அறிவிப்பை எதிர்பாராமல் சந்தாவினை அனுப்பக் கோருகின்றோம்.**

தடையில்லாமல் இவ்விதழைப்பெறவிரும்புவோர் ஆயுள் சந்தா ரூ. 100. செலுத்தித் தொடர்ந்து தானும் தனக்குப்பின் விரும்பும் ஒருவருக்கு எழுதிவைத்தும் "ஞானசம்பந்தம்" பெறலாம் இதுவரை 858 அன்பர்கள் ஆயுள்சந்தா கட்டி ஞானசம்பந்தத்தைப் பெற்றுப் படித்துவருகின்றனர்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	...	ரூ.	10—00
,, (சிலோன்)	...	ரூ.	12—00
,, (வெளிநாடு)	...	ரூ.	23—00
ஆயுள் சந்தா (உள்நாடு)	...	ரூ.	100—00
,, (வெளிநாடு)	...	ரூ.	125—00

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :— செயலாளர்,

ஞானசம்பந்தம் செயலகம்,

தருமபுரம், மாயூரம் – 609 001

தஞ்சை மாவட்டம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் சார்பாகத் தமிழில் வெளிவருகிறது.

மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், நடைமுறை வாழ்க்கையில் மதத்தைக் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், பக்தி, சமய, சமரசம், உபநிஷத உண்மைகள், சைவம், வைணவம், ஞானக் கதைகள் ஆகிய கருத்துக்களைக்கொண்டது.

தற்கால நவீனமக்களின் மனப்போக்குக்கு ஏற்றவகையில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் காட்டிய வழியில் சிறந்த மனிதர்களை உருவாக்குவது ஒன்றே இப்பத்திரிக்கையின் இலட்சியம்.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் அவசியம் படிக்க வேண்டிய பத்திரிக்கை இது.

சந்தா விவரம் :

வருட சந்தா	...	**ரூ.**	**12—00**
ஆயுள் சந்தா	...	**ரூ.**	**150—00**
தனிப் பிரதி	...	**ரூ.**	**1—20**

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 15 ஆகவோ ஒரு வருடத்திற்குள் செலுத்தலாம்.

தேவைக்கு எழுதுங்கள் :-

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை - 600 004

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 41	துன்மதி - தை - 10—2—82	இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

கடமைசெய்வோம்! காத்திருப்போம்!

இலவுகாத்த கிளி :

ஒன்று கிடைக்கும் என நெடுநாள் எதிர்பார்த்திருந்து ஏமாற்றம் அடைவோர்களை 'இலவுகாத்த கிளி' போலானார்கள் எனக்கூறுதல் தமிழ்நாட்டு மரபு. இலவ மரத்தில் தோன்றிய காய் நாளைபழுக்கும், நாளைபழுக்கும் என எதிர்பார்த்திருந்து, ஒருநாள் காய் வெடித்துப் பஞ்சு புறப்பட்டபோது கிளி வாடி வதங்குவது போல் தமிழகத் திருக்கோயில்களைப் பல்வேறு சோதனைகளுக்கு இடையில் பாதுகாத்துவரும் பொறுப்பு மிக்கவர்கள், நாடாள்வோரின் மனம், இவற்றின் வளர்ச்சிக்கு உதவியாகக் கனியாதா, கனியாதா என்று இருபது ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருந்து ஏமாற்றத்தில் வாடுவதை பக்தியுள்ளம் கொண்ட தமிழகமக்கள் அறிவார்கள் என்றே நம்புகின்றோம். காமராசர், பக்தவத்சலம், அண்ணாதுரை, கருணாநிதி, எம்.ஜி.ஆர். என ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தனவே தவிர, அறநிலையங்களின் வளர்ச்சியில் புதியமாற்றங்கள் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை. மாறாக மேலும் நிலைமை சீர்கெட்டே வந்துள்ளது.

கடமை கண்போன்றது :

'ஞானசம்பந்தம்' சமய - தோத்திர - சாத்திர நுட்பங்களை யும், தமிழ் இலக்கிய - இலக்கணப் பெருமைகளையும் வெளியிட வேண்டும் என்ற நோக்கில்தான் உருவாக்கப்பட்டது. ஆனால், தற்போது வருவாய்க் குறைவு பற்றிய விளக்கங்களும், அரசின் பல நடவடிக்கைகள், பற்றிய விமரிசனங்களும் இதில் தொடர்ந்து வருவது சிலருக்கு வியப்பாகத் தோன்றக் கூடும். 'ஞானசம்பந்தம்' இவ்வாறான தன்னிலை விளக்கங்களை எழுத நேர்ந்தமைக்குக் காரணங்கள் உண்டு. கடந்தஇருபது ஆண்டு களாகத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் இயற்றி வந்திருக்கும் பல்வேறு சட்ட நடவடிக்கைளால், பெரும்பான்மை மக்களின் சமயமாகிய நமது சைவசமயமும் சைவ நிலையங்களாகிய சிவாலயங்களும், சைவ ஞான பீடங்க ளாகிய திருமடங்களும், வைணவம் முதலிய மற்ற இந்துசமயங் களும், சமய நிலையங்களும் எவ்வாறெல்லாம்-வலிமை இழந்து- பொலிவுகுன்றி - சக்கரங்கள் இல்லாத தேர்களாக முடக்கப் பட்டுள்ளன என்பதனை எடுத்துக்கூறவேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்குஉண்டு. சமய நம்பிக்கை உடையவர்களால் நடத்தப்படும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் திரைப்படங்களுக்கு ஒதுக்கும் இடத்தில் பத்தில் ஒருபங்கையாவது இந்நாட்டின் பாரம்பரிய சமய வளர்ச்சிக்கென ஒதுக்கினால் நாம் இதுபற்றி அடிக்கடி அறிவிப்பு விடவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. நாளைக்கு ஒருநாள் 'இப்படிப்பட்டநிலை இருப்பது எங்களுக்கு தெரியாதே' என்று பொதுமக்கள் குறைகூறும்நிலை வாராதிருக் கவே இவைபற்றி இடைவிடாது உண்மை நிலைமைகளை 'ஞானசம்பந்தம்' தொடர்ந்து எழுதவேண்டியுள்ளது. விடியும் போது விடிந்தாலும் ஊதுகிற சங்கை உரியநேரத்தில் ஊத வேண்டியது நமது கடமையாகிறது. கடன்ம கண்போன்ற தல்லவா ?

தள்ளுபடிபற்றிய அறிவிப்பு :

பல ஆண்டுகளாக வசூலாகாத திருகோயில்களுக்குரிய குத்தகை பாக்கிகளை வசூலிக்க அரசு என்ன செய்யப்போகிறது என்று நிருபர்கள் திருச்சிராப்பள்ளியில் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டிருக்கிறார்கள். பதில் அளித்த முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை இது தொடர்பாய் அரசு மேற்கொண்டுள்ளது என்று கூறியதாகப் பத்திரிகைச்செய்திகள் அறிவிக்கின்றன. ஆனால் இன்றுவரை பழையபாக்கிகளையும்சரி,

நடைமுதல் குத்தகைகளையும்சரி வசூலிக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாருக குத்தகைக்காரர்களுக்கு அரசு மேலும் சலுகை வழங்கியுள்ளது. அவர்கள் அறநிலையங்களுக்குச் செலுத்தவேண்டிய குத்தகை பாக்கியில் ஐந்தில் ஒருபங்கை செலுத்தினுல்போதும். மீதிநான்குபங்கை தள்ளுபடி செய்துவிடுவதாய் அறிவித்துள்ளது. இதன்பொருள் ஐந்தாண்டுக்குத்தகை பாக்கியில் ஓராண்டுக்குரியதைச் செலுத்தினுல் போதும் என்பதுதான். ஓராண்டிற்கு உரிய வருவாயைவைத்து ஐந்தாண்டிற்கு எப்படிச் செலவுசெய்ய இயலும் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள் !

காங்கிரஸ் அடி எடுத்துக்கொடுத்தது !

திருக்கோயில்கள் நிலவருவாயை நம்பியுள்ளன. இங்கே பணியாற்றும் லக்ஷக்கணக்கான ஊழியர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய கடமை அரசுக்கு உண்டு. நாலாண்டு வருவாயைத் தள்ளுபடிசெய்து குத்தகைதாரர்களுக்குச் சலுகை வழங்கும் அரசு மறைமுகமாக ஆலய ஊழியர்களைப் பட்டினி போடநினைக்கிறது என்றே கொள்ளவேண்டியுள்ளது. நடுநிலைமைமிக்க எந்த அரசும் ஒவ்வொருசெயல்பற்றியும் சிந்திக்கக் கடமைப்பட்டது. ஒரு சாராருக்குச்செய்யும் சலுகை மற்ெருரு சாராரைப்பாதிக்கலாகுமா என்பதை சம்பந்தப்பட்டவர்கள் யோசிக்கவேண்டுவது இன்றியமையாதது. குத்தகைபாக்கியைத் தள்ளுபடிசெய்த அரசு, கோயில்கள் செலுத்தவேண்டிய நிலவரிகளையும் தள்ளுபடிசெய்திருக்கவேண்டும். ஆனல் அதனைச் செய்யாது, கடுபிடி முறைகளால் நில்வரிவசூல்செய்ய அரசு மறைமுக ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. இந்தநிலைக்கு இப்போதுள்ள அரசு மட்டுமே பொறுப்பாகாது. காங்கிரஸ் காரர்கள் அடிஎடுத்துக்கொடுத்தார்கள். பின் வந்தவர்கள் தொடர்ந்து பாடுகின்ருர்கள், இந்த முரண்பட்ட நிலையினை அரசு பரிசீலித்து அறநிலையங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குதல் வேண்டும் என்பது நமது வேண்டுகோளாகும்.

நிலமை எவ்வாறு மோசமாகும் ?

அறநிலைய நிர்வாகத்தைச் சுயாதிகாரம் உடைய ஒரு தன்னுட்சிக் குழுவிடம் ஒப்படைத்தால் இத்தகு தவறுகள் நேராது என்பது ஒருதலை. முதலமைச்சர் இத்தகு தன்னுணைக்குழு அமைத்தால் நிலைமை மேலும் மோசமாகும் என்கிருர். எவ்வகையில் இது மோசமாகும் என்பதனை முதல்வர் விளக்கினுல்

நாமும் தெரிந்துகொள்ள வசதியாகும், தற்போது நியமிக்கப்பட்டுள்ள அறங்காவலர் குழுவினர்களைப்பற்றி மக்கள் நன்கு அறிவர். திரு. அண்ணாதுரை அவர்கள் கட்சிக்காரர்களைத் திருக்கோயில்களில் அறங்காவலர்களாக நியமிக்க விரும்பவில்லை. அவர்வழி ஆட்சிபுரிவோர் இதனைச் சித்திக்கவேண்டும். சமய ஈடுபாடும், சமய வளர்ச்சியில் நாட்டமும் இல்லாதவர்கள் கையில் இருக்கும் திருக்கோயில்களைமீட்டு,சமயநம்பிக்கைமிக்க சான்றோர்கள் அடங்கிய தன்னாட்சிக் குழுவிடம் ஒப்படைப்பதே தர்மமும் நீதியுமாகும் என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம். தன்னாட்சிக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதனை அறநிலைய அமைச்சர் பின்னோக்கிப் போதல் (REVERSE) என்று வருணிக்கிறார், இது எவ்வாறு பிற்போக்காகும். முன்னோக்கிப் போவதில்ஆபத்து நிலவுமானால், பின்னோக்கிப் போதலே அறிவுடைமையாகும். எனவே, வாதப்பிரதி வாதங்களை விட்டுவிட்டு, அரசு உடனடியாக த்தக்க அறிஞர்களைக் கொண்ட தன்னாட்சிக்குழு அமைத்து அதன்பால் அறநிலையங்களை ஒப்படைப்பதே நீதியாகும்.

வேண்டுகோள் :

தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலிவடைந்த பிரிவினர்களது நல்வாழ்வுக்குப் பாடுபடவேண்டும் என்ற நல்ல எண்ணம் உடையவர்கள். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அறநிலையங்களின் வளர்ச்சி பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுவந்திருப்பதனை முதல்வர் அறிவார்கள் என்றே நம்புகின்றோம். சமயமும் – சமயநிலையங்களும் மக்களின் உயிர்ப்போடும், உணர்வோடும் கலந்துநிற்பன. அறநிலையங்களின் வளர்ச்சிக்கு ஏற்பட்டிருக்கும் தடைகளை முதல்வர் அவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் அறிந்து, அவற்றை அகற்ற உரிய மனப்பூர்வமான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்றே தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள். சமய நம்பிக்கையற்ற சிலரைத் திருப்திப்படுத்த – பெரும்பான்மையானவர்களை விரோதித்துக் கொள்வது ஆட்சியாளர்களுக்கு உகந்ததல்ல என்பதனை முதல்வர் அறிவார் என்றே நம்புகின்றோம். அரசு தன் நிதிகளை வழங்கி அறநிலையங்களைக் காக்கவெண்டும் என்பது நமது வேண்டுகோள் இல்லை. அவற்றுக்கு உரிய வருவாயை அவை பெற உதவுங்கள் : தடையாக நிற்காதீர்கள் : நிற்போரை அனுமதிக்காதீர்கள் என்றே வேண்டுகின்றோம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

புதுக்கோட்டையில் நடைபெற்ற இந்து சமய மாநாட்டில்

வழங்கியருளிய

ஆசியுரை

13—12—1981

" வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மையானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே "

இந்து – சொல்விளக்கம்

இந்திய நாட்டிலுள்ள வேதவழிப்பட்ட சமயங்களைக் குறிக்கத் தற்போது 'இந்துமதம்' என்றசொல் கையாளப்பட்டு வருகிறது. 'இந்து' என்ற சொல்பற்றிய விளக்கத்தைப் பலரும் பலவிதமாகக் கூறிவருகின்றனர். ஹிந்து என்ற சொல் பாரசீகச் சொல். அதனைக்கிரேக்கர்கள் இந்து என்று வழங்கினர். அலெக்ஸாண்டர் இமயமலைக் கணவாய் வழியே சிந்துநதிக் கரைக்கு வந்தபோது அப்பகுதியில் வாழ்ந்த மக்களைச் 'சிந்து' என்று வழங்கினர். என்றும் அதுவே பின்னர் 'இந்து' என்று மாறி வழங்கலாயிற்று என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சப்தகல்பத்ருமம் என்ற சம்ஸ்கிருத நிகண்டு, இந்த 'இந்து' என்ற சொல்லுக்கு ஒரு விளக்கம் தருகின்றது. "ஹீநம் தூஷ்ய திஇதி" என்று; அதாவது, 'ஈனனையோ ஈனச்செயலையோ வெறுப்பவன் என்ற காரணத்தால் அவன் இந்து எனப்படும் ஜாதியினன் ஆயினன்' என்பது

அந்நிகண்டு கூறும் விளக்கம். ஹிந்தி நிகண்டு ஒன்று வேறு விளக்கம் கூறுகின்றது. 'வேதம், ஸ்மிருதி, புராணம் முதலியவை களையோ இவைகளில் ஒன்றையோ பின்பற்றி நடப்பவர் இந்து ஆவார்' என்பது அந்நிகண்டு கூறும் விளக்கமாகும். ஹிம் – ஹிம்சையில், து – துக்கமடைபவன் என்று வேதவாக்கியம் ஒன்று விளக்கம் கூறுகிறது என்பர். "ஹிம்ஸாயாம் தூயதேய: ஸ: ஹிந்து: இத்யபிதீயதே" என்பதால் ஹிம்சையைக்கண்டு வருந்துபவன் இந்து எனப்படுவான் என்பது அதன் விளக்க மாகும்.

எனவே 'இந்து' என்பது ஒரு குழுவைக் குறிக்க எழுந்த சொல் என்றும் அக்குழு இரக்க உணர்வு மிகுந்தவர்களைக் கொண்டதாக இருப்பது என்றும் விளக்கம் காணலாம். பிற உயிரினங்கள் துன்புறும் நேரத்தில் அதனைத் துடைக்க எண்ணுவதும், அங்ஙனம் துடைக்க இயலாவிடில் அதுகண்டு துன்புறுவதும், இந்துஎனப்படுவான் ஒவ்வொருவனுக்கும் உரிய பண்பு என்பதை உரிய விளக்கமாகக் கொள்ளலாம்.

இலக்கிய விளக்கம்

இப்பண்பு விளக்கம் நம்அறநூல்கள் பலவற்றிலும் பரக்கக் காணலாம். சேக்கிழார், திருக்குறிப்புத்தொண்டர் வரலாறுகூறும் பகுதியில்,

"தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டை நாட்டியல்பு
[சொல்வரைத்தோ?"

என்று கூறுகின்றார். பின்னே வந்த தாயுமான சுவாமிகள்,

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்! பராபரமே"

என்று அருளிச்செய்கின்றார். எல்லா உயிர்களையும் என்னுயிர் போல் எண்ணவும் அவை வேதனைப்படுகிறபோது இரங்கும் உள்ளம் பெறவும் நின் தெய்வ அருட் கருணையைத் தருவாய் என்றுவேண்டுவது 'இந்து' எனும்சொல்லுக்குரியவிளக்கமாகும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

என்று, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுவதோடுமட்டும் அமைந்துவிடாமல் துன்புறும்வழித் துயர்துடைக்கும் உள்ளமும்

வேண்டும் என்று வேண்டுகின்ற தாயுமானுரின் உள்ளம் பெற்றவர் இந்து எனப்படுவார். இந்நூற்ருண்டுக் கவிஞர் பாரதியாரும் இக்கருத்தினராய்,

" பக்கத்து இருப்பவர் துன்பம் பார்க்கப் பொருதவன்
புண்ணிய மூர்த்தி "

என்று பாடினர். எனவே அருளாளர்களும் அறநூலாசிரியர் களும் ஒத்த கருத்தினராய், துன்புறும்உயிரின் துன்பம்துடைக்க முனைவதும் இல்லையேல் வருந்துவதும் இந்துமதத்தைச் சார்ந்த ஒவ்வொருவரின் அடிப்படைக் குணம் என்பதை விளக்கிக் கூறியுள்ளனர்.

செயல் விளக்கம்

மேலும் அன்ருடம் மேற்கொள்ளுகின்ற செயல்களிலும் இக் குணம் மேலோங்கி இருப்பதனை உணரலாம். எறும்பு போன்ற உயிரினங்கள் பலவும் உண்ணப் பயன்படும் வகையில் அரிசி மாக்கோலம் இடுதல், காக்கைக்கு உணவு இடுதல், எறும்புப் புற்றுக்கு அரிசி போடுதல் போன்ற பழக்கவழக்கங்களிலும் பிற உயிரினங்களின் மேல் நாம் கொண்டுள்ள இரக்கம் தெள்ளிதின் புலனுகும்.

சங்ககாலத்திலும் முல்லைக்குத் தேரீந்த பாரியின் மனநிலை யும், மயிலுக்குப் போர்வையைத் தந்த பேகனின் உள்ளமும் இதேநோக்கம் கொண்டிருந்ததனைவரலாறு கொண்டுஉணரலாம்.

எனவே, பிற உயிர் படுகிற துன்பம் கண்டு இரங்குவது இந்து இனத்தைச் சேர்ந்தவனின் உயிர்க்குணம் என்பதும் அதுவே இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை என்பதும் தெளிவு கொள்ள வேண்டியவைகளாகும். இதுபற்றியே புலால் உண்ணுமை இந்து மதத்தில் வற்புறுத்தப்படுகிறது.

சைவமே முதற் சமயம்

இந்துக்களின் சமய நெறியினை வகுத்துரைக்கும் நூல் வேதம் எனப்படும். வேதவழிப்பட்ட சமயத்தை வைதிக சமயம் எனக்குறிப்பர். அந்த வேதத்தில் வருணன், அக்னி' வாயு, சூரியன் முதலான பல தெய்வங்கள் குறிப்பிடப் பட்டிருந்தாலும் சிவபரம் பொருளே முதன்மையும் தலைமையும் உடையது என்பதை விளக்கியுள்ளனர்.

சிவனை வழிபடும் சைவமே மிகப்பழமையானது என்பதை மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் காணக் கிடைத்த அகழ்வாய்வுப் பொருள்களாலும் வேதாகம புராண

இதிகாசங்களாலும் நன்கு தெளியலாம். மேலும் திருக் கயிலாயம், கேதாரம், அமரநாதம் போன்ற இடங்களில் சிவலிங்கமே உள்ளது. சக்தியைத் தனித்துப் பிரித்து வழிபாடு செய்தது பிற்காலநிலையாகும். சத்தியை இணைத்து வழிபட்டதே முற்காலநிலை. திருமுறை ஆசிரியர்கள் முருகனையும் கணபதி யையும் அம்பாளையும் துதிக்கும்போது சிவபெருமானோடு இணைத்தே துதித்து வழிபாடுசெய்தமையை அவர்கள் அருளிச் செய்த பதிகங்கள் சான்றுபகர்கின்றன.

" நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான் "

என்ற அப்பர் பெருமான் பாடலும் இதுபற்றி விளக்குவதைக் காணலாம். காஞ்சிபுரத்தில், பாடல் பெற்ற தலங்களாகப் போற்றப்பெறும். திருக்கச்சித்திருஏகம்பம், திருக்கச்சிநெறிக் காரைக்காடு, திருக்கச்சிஅநேகதங்காவதம், திருக்கச்சிஓண காந்தன்தளி, திருக்கச்சிமேற்றளி ஆகிய ஐந்து தலங்களிலும் அம்பிகைக்கு மூல விக்கிரகம் இல்லை என்பதும் ஐந்து தலங் களுக்கும் அம்பாள் ஏலவார்குழலி என்னும் உற்சவ விக்கிரமே உள்ளது என்பதும் பழமையான வழிபாட்டு முறையில் சத்தியைப் பிரித்து வழிபடுவது இல்லை என்பதை விளக்குகிற தன்றோ ! இலிங்கத்தைச் சிவமாகவும், பீடத்தைப் பிரிப்பின்றித் திகழும் சத்தியாகவும்கொண்டு வழிபட்டனர் நமது முன்னோர்.

ஆதலால் சக்தியை வழிபடும் சாக்தம், முருகனை வழிபடும் கௌமாரம், கணபதியை வழிபடும் காணுபத்தியம், திருமாலை வழிபடும் வைணவம் என்பவை காலத்தின் நிலையில் பிந்தியவை என்பதும் அவை அனைத்தும் சைவத்தின் பிரிவுகளே என்பதும் வரலாற்றுய்வு மிக்காரும். நுணுகி ஆய்வோரும் உணர்ந்து கொள்ளலாம்.

எந்தச் சமயத்திலிருந்து. எந்தக் கடவுளை வழிபட்டாலும் அது சிவபரம் பொருளையே அடையும் என்பதும் சைவக் கருத்தாகும். உதாரணமாக எந்த ஆற்றில் ஓடும் நீரும் முடிவில் கடலையே சென்று அடைவதுபோல எல்லாச் சமயங்களும் ஒரு பரம்பொருளையே அறிவிக்கின்றது என்பது வேதவாக்கியம். அதனல்தான் அருள்நந்திசிவமும்,

" யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனர்தாம் வருவர் "

என்று விளக்கியருளினர்.

பிரச்சாரம் தேவையா?

இத்தகைய சிறப்புடைய இந்துமதக் கருத்துக்களை அறிந்து அவற்றில் நம்பிக்கைகொண்டு பின்பற்றுவோர் இன்று நாட்டில் கோடிக்கணக்கில் உள்ளனர். நாத்திகம் பேசுவோரும்கூட ஒரு காலத்தில் பேசிய கருத்துக்களைப் பிற்காலத்தில் தம் அனுபவங்கள் தரும் பாடத்தினுல் மாற்றிக்கொள்கின்றனர். இளமையில் ஏதோ ஒரு வேகத்தில் பலவிதக் கருத்துக்களைப் புரியாமல் பேசிவந்தாலும் காலம் தரும் கஷ்டநஷ்டங்களாகிய அனுபவங்கள் தமக்கு நேரடியாகவரும்போது யாரும் மாறத் தான் செய்கிருர்கள். இதுவும் இயற்கை நியதியே. எனவே இன்றைய நிலையில் சமய நம்பிக்கை பற்றியோ அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ருே பிரச்சாரம் செய்யத் தேவை இல்லை. அங்கங்கே நடக்கும் அதிசயங்களும் ஆங்காங்கே இருக்கும் இறையருள் செயற்பாடுகளுமே அவ்வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கின்றன. உதாரணமாக இந்த ஊரிலேயே ஓர் அதிசயம் இருக்கிறது. இவ்வூர்த்தலவரலாற்றில் காமதேனு என்னும் பசு கல் மலையைத் தன் கொம்பினுல் கீறி அதில் ஊறும் நீரைக் காதில் முகந்துவந்து இவ்வூர்ப் பெரு மானுக்கு அபிஷேகம் செய்வித்தது என்று உள்ளது. அதன் தொடர்பில் இவ்வூர்த் திருக்கோயிலின்மேல் சுமார் 25 அடி உயரத்தில் ஒரு சுனை உள்ளது. அதன் நீர், என்றும் எந்த வறட்சிக்காலத்திலும் முற்றிலும் வற்ருமல் இருக்கிறது. பூமியில் தரைமட்டத்திலுள்ள கிணற்றிலும் திருக்குளத்திலும் உள்ள நீர் வற்றிவிடுவதையும் பலநேரங்களில் தண்ணீரே இல்லாதிருப் பதையும் காணமுடிகின்ற இந்த ஊரில் 25 அடிக்குமேல் மலைப் பகுதியிலுள்ள சுனையில் தண்ணீர்வற்ருமல் இருக்கிறது என்ருல் அது வியப்பாக உள்ளதன்ருே! கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படாத இதைத்தான் இறையருள் என்று கூறுகிருேம்.

மாநாடுகள் ஏன்?

அங்ஙனமெனில் இதுபோன்ற மாநாடு கூட்டி எதைச் சிந்திக்கவேண்டும்? என்ற கேள்விக்குரிய விடையினை ஆழ மாகச் சிந்தித்தல் நலம் பயக்கும். இந்நாட்டில் வானளாவிய கோபுரங்களை உடைய திருக்கோயில்களுக்குப் பஞ்சமில்லை. அக்கோயில்களை நோக்கி வந்து வழிபடும் அன்பர்களுக்கும் பஞ்சமில்லை. அவர்களை நல்வழிப்படுத்தும் ஞானிகளுக்கும் பஞ்சமில்லை. சமய நூல்களையும்

தத்துவங்களையும் ஆக்கி அச்சிட்டு வெளியிடும் பணியினையும் அறநிலையங்கள் அமைத்தும் மாநாடுகள் கூட்டியும் நல்ல கருத்துக்களை வெளியிடும் பணியினையும் உயிர் மூச்சாகச் செய்துவரும் திருமடங்களுக்கும் பஞ்சமில்லை. பின் எங்கேதான் குறை இருக்கிறது? எனின் இவை அனைத்தும் ஒருங்கு இணைந்து திட்டமிட்டுச் செயல்படாததே குறையாகும். நியாயங்களை, அங்கும் இங்குமாகப் பேசிக்கொண்டில்லாமல் ஓர் இயக்கத்தின் கீழ் இருந்து சொல்லவும் அதன்வழிச் செயற்படவும் இயலாமல் போனமையே இன்று தோன்றியுள்ள பல பிரச்சனைகளுக்கு மூலகாரணங்களாகும்.

இவைபோன்ற கருத்துக்களைச் சிந்திக்கவும் செயற்படத் தேவையான ஆக்க பூர்வமான பணிகளைத் திட்டமிடவும் இது போன்றமாநாடுகள் நடைபெறுமானால் அது நாட்டின் எதிர்கால நன்மைக்கும் குறிப்பாகச் சமயவளர்ச்சிக்கும் அன்பர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கும் பயன்தரும் என்பது உறுதி. இவ்வடிப் படையில் சமய நிறுவனங்களும் சமய வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ள அன்பர்களும் ஏன்? அரசும் சேர்ந்து செயற் படுத்தவேண்டிய திட்டங்களைப்பற்றிச் சிந்திப்போம்.

(தொடரும்)

சிவஞான சித்தியார்

யாதொருதெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாக ணர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும்இ றக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும்
ஆதலான் இவையி லாதான் அறிந்தருள் செய்வனன்றே.

இங்குநாம் சிலர்க்குப் பூசை இயற்றினல் இவர்களோவந் (து)
அங்குவான் தருவா ரன்றேல் அத்தெய்வ மத்தனைக்காண்
எங்கும்வாழ் தெய்வமெல்லாம் இறைவனுணையினல் நிற்ப (து)
அங்குநாம் செய்யுஞ் செய்திக்காணைவைப் பாலளிப்பன்.

காண்பவன் சிவனே யானல் அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம் அரன்றன் பாதம் மறந்துசெய் அறங்க ளெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன விதியறம் விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.

— ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய் சுவாமிகள்.

துன்மதிவருட - மகாசிவராத்திரி.

செங்க ணனும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

— இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை.

ஒவ்வோர் ஆண்டும் மாசித் திங்களில் வரும் தேய்பிறை சதுர்த்தசி நாளே மகாசிவராத்திரி எனக்கொண்டாடப்படுகிறது. இந்நாள் சைவப் பெருமக்களுக்கு உரிய புனித நாள்களுள் தலையாயது. சிவராத்திரியில் உபவாசம் இருந்து, இரவு நாலு காலம் சிவபூஜை செய்து, மறுநாள் காலை பாரணை கொள்ளுதல் சிறப்பு. சிவபூஜை மேற்கொள்ளாதவர்கள் சிவாலய தரிசனம் செய்வதோடு, விரதம் மேற்கொண்டு இரவு கண்துயிலாது நோற்பது வழக்கம். சிவராத்திரி விரதத்தின் தோற்றம், இவ் விரதத்தால் ஏற்படும் பயன் முதலியனபற்றிப் பல்வேறு செய்திகள் உண்டு.

ஊழிக்காலத்தில் இரவுபகல் அற்ற நேரத்தில் உமாதேவியார் சிவசொருபத்தைத் தம் இருதய கமலத்தில் வைத்து வழிபட்ட நாளே சிவராத்திரி என்பது ஒரு செய்தி. பிரம - விஷ்ணு இருவரும் தம்முள் யார் பெரியவர் என்று தருக்கி நின்ற காலத்தில் இறைவன் சிவலிங்கத் திருமேனியிலிருந்து ஜோதி வடிவாக வெளிப்பட்டுக் காட்சியளித்த சிவராத்திரி என்றும் ஒரு கருத்து உண்டு. வரலாறு பலவாக இருப்பினும் சிவராத்திரி விரதமும், பூஜையும் வழிபாடும் இம்மை மறுமைப் பயன்களை நல்குவன என்பது உறுதி. சிவராத்திரி நான்கு வகையாகக் கூறப்படும். இவற்றுள் மகாசிவராத்திரியே மிகவும் சிறப்புடையதாகும்.

துன்மதிவருட மகாசிவராத்திரி, மாசித்திங்கள் 10 ஆம்நாள் 22—2—1982 திங்கட்கிழமை வருகிறது. சதுர்த்தசி 51 நாழி,

20 நொடி உள்ளது. திருவோணநட்சத்திரம் 27 நாழி 21 விநாடி வரையிலும். அடுத்து அவிட்ட நட்சத்திரமும் நிலவும் இந்நாளில் சிவராத்திரி பூஜை முதலியன நிகழ்த்துதல் நல்லது. திரயோதசியும், சதுர்த்தசியும் பிரதோஷ காலத்தில்கூட அறுபது நாழியும் சதுர்த்தசி நிலவ வரும் சிவராத்திரி மிகவும் சிறப்புடையது. இவ்வாண்டு 51 நாழிவரை மூன்று ஜாமபூஜையிலும் சதுர்த்தசி அமைந்துள்ளது, இதுவும் சிறப்பேயாகும்.

குமார தந்திரம், காமிகம், சுவாம்புவம், நாரதீய சம்ஹிதை மற்றும் சிவராத்திரி நிர்ணயம் போன்ற நூல்களில் எந்த நாளில் மகாநிசியில் (நள்ளிரவில்) சதுர்த்தசி இருக்கிறதோ அதுவே சிவராத்திரிக்கு உகந்த நாள் என்றும், அந்நாளே விரதத்திற்கு உரியதென்றும், ஒப்ப எடுத்துரைக்கின்றன. இவ்வகையில் துன்மதி வருடம் மாசித்திங்கள் 10ம் நாள் திங்கள் நள்ளிரவில் சதுர்த்தசி அமைவதால் இந்நாளே இவ்வாண்டு சிவராத்திரி விரத நாளாகக் கொண்டாடப்படவேண்டும். விமலாகமம் கூறுமாறு சூரியன் மறையும் நேரத்தில் சதுர்த்தசி அமையுமானல் அதுவே உத்தமத்திலும் உத்தம சிவராத்திரியாகும். இவ்வாண்டு சூரிய அஸ்தமனத்தில் சதுர்த்தசி பூரணமாக இருப்பதால் இச் சிவராத்திரி உத்தமத்திலும் உத்தமமாகும்.

சைவப் பேரன்பர்கள் சிவராத்திரி நன்னளில் விரதம் மேற்கொண்டு, சிவாலய தரிசனம், சிவபூஜை முதலியவற்றுடன் சிவ சிந்தனையோடு இரவு கண்துயிலாது நோற்று மறுநாள் விடியல் நீராடி அன்பர்களுடன் பாரணை செய்து இம்மை மறுமை இன்பங்களை அடைவார்களாக!

சிவதரிசன பலன்

காலைதொழ அற்றைவினை கட்டகலும்; கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்–மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரம் எல்லாம் விடும்.

நாட்டில் பரிப்பாகன்

வித்துவான். திரு. தா. குருசாமி தேசிகர்

மணிவாசகப்பெருமான் மனநிலையை விளக்கிக் காட்டும் பகுதி திருவாசகம் அனைத்துமே யாயினும் பண்டாய நான் மறைப் பகுதியேயாம் என்பதனை அறியலாம். அப்பகுதியில் வருகின்ற ஒருதொடரே நாட்டில் பரிப்பாகன் என்பது.

ஆசாரியனாக எழுந்தருளி மணிவாசகரை ஆட்கொண்டார். ஆசாரியனாகவந்த பெருமான் தாயிற்சிறந்த தயைகாட்டி மருள் நிலை நீக்கித் திருவருள் வழங்கினார்.

அவ்வருள்நிலை எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனாய் இருந்தது என்பதனை மணிவாசகர் நினைவு கூர்ந்து அருள்கின்றார். அவ்வருள் மொழிகளை ஆண்டுக்காண்க. ஈண்டு ஆண்டுகொண்ட தன்மைமட்டும் சிந்திப்போம்.

சட்சுதீட்சை :

இறைவன் சட்சுதீட்சை செய்து தம்மை ஆட்கொண்ட விதத்தைப் பல இடங்களில் மணிவாசகர் காட்டுகின்றார்.

> " மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
> மறுமை யோடிம்மையுங் கெடுத்த பொருளனே. "

" ஈறிலாதநீ எளியையாகிவந்து ஒளிசெய் மானுடமாக நோக்கி" என்பன போன்ற இடங்கள் சட்சுதீட்சையைக் காட்டுவன. இறைவன் குருவாகவந்தார் என்பதனை,

' குருபரனாகி அருளியபெருமை ' என்று மாணிக்கவாசகர் உணர்த்துகின்றார். 'கோகழியாண்ட குருமணி' என்றும், 'கூடலிலங்கு குருமணி' என்றும் எடுத்துப் பல இடங்களில் பேசுகின்றார். குருவாகவந்து சட்சு தீட்சை செய்து திருநீறு வழங்கித் தம்மை உய்யக்கொண்டதாக கீழ்க்கண்ட வரிகளில் உணர்த்துகின்றார்.

" தன்திருநீறு. எனக்கருளி", " திருநீறு பூசப்பட்டேன் " என்பனபோன்ற வரிகள் இறைவன் மாணிக்கவாசகர்க்குத் திருநீறு வழங்கிய செய்தி விளக்கப்படுகின்றன.

திருவடி தீக்கை :

" இறைவன் சட்சுதீட்சை செய்து திருவடி தீட்சை, செய்த வரலாற்றை,

" இடைமருததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்த அப்பரிசும் "

என்ற திருவாசக வரிகள் விவரிக்கின்றன. அத்திருவடி தீட்சையால் ஏற்பட்ட பலன்களை மாணிக்கவாசக சுவாமிகள் மொழியால் இனிதுணரலாம்.

" கானகத்தே நடக்குந் திருவடி என்தலைமேல் நட்டமையால்
கடக்குந் திறலைவர் கண்டார் தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே "

என்ற திருப்பாட்டு திருவடிச் சிறப்பை விளக்குகிறது.

குருதட்சணை :

குருகாணிக்கைவழங்குவது மரபு. அரசுப்பொருள்முழுவதும் காணிக்கையாக்கிய மணிவாசகர் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனுக்கே காணிக்கையாக்குகின்றார்.

" அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமையும் எல்லாம்
குன்றேயனையாய் எனை ஆட்கொண்ட போதே
[கொண்டிலையோ "

என்ற திருவாசகவரி குருகாணிக்கையைக் காட்டும். அக்குரு காணிக்கையின் பயன் என்ன? இறைவன் தன்னையே தமக்கு வழங்கியதாகக் குறிப்பிடுகின்றார்.

'தந்தது உன்றனைக் கொண்டது என்றனை' என்றவரி மணிவாசகர் தாமடைந்த பயனை நன்கு விளக்குகின்றார் என்ற செய்தியை 'நாட்டிற் பரிப்பாகன்' என்ற வார்த்தையால் சுட்டுகின்றார்.

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை — வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமலபாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து !

என்ற திருவெண்பாவால் உணர்த்துகின்றார்.

நாட்டில் பரிப்பாகன் நம்வினையை வீட்டி, திருவருள் வழங்கி உய்யக்கொள்கின்றார் என்பதோடு 'குதிரையின் மேல்வந்து கூடிடுமேல் குடிகேடு' என்ற உண்மையும் நாட்டில் பரிப்பாகன் என்ற தலைப்பு விளக்கும்.

மதிப்புரை

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம்

மூலம் – நாகரீ எழுத்திலும் தமிழ் எழுத்திலும்
(தமிழ் விரிவுரையுடன்)

விரிவுரை ஆசிரியர் :- பிருமஸ்ரீ சி. வே. இராதாகிருஷ்ண சாஸ்திரிகள். வெளியிடுபவர் :- ஸ்ரீ பஞ்சாபகேச அய்யர். N. இராமசாமி அய்யர் சாரடீஸ் ஸொஸைடி. திருச்சிராப்பள்ளி. விலை. ரூ. 25—00.

காஷ்டா ஸைவ பரா ஸூக்ஷ்மா
ஸர்வ திக்கா S ம்ருதாத்மிகா ।
ப்ரத்வஸ்தாவரணு சாந்தா
வஸ்து மாத்ரா S திவாலஸா ।।
ஆத்யந்தோபரதா ஸாத்வீ
மூர்தித்வே நோபசர்யதே ।। (மதங்காகமம்)

“அந்த சிவசக்தி இணையற்றது ; சூக்ஷ்மமானது ; எங்கும் பிரகாசித்துக்கொண்டிருப்பது ; அமுதமயமானது ; அழியாதது; பந்தங்களிலிருந்து விடுபட்டது ; அமைதியானது ; சிவத்தைக் காட்டிலும் வேறுபடாதது; ஆன்மாக்களைக் கரையேற்றஊக்கங் கொண்டது ; ஆதியும் அந்தமும் இல்லாதது ; நித்யமானது ; கருணைவடிவமானது; அது உருவம் கொண்டது என்று கூறுவது உபசாரமாகச் சொல்வதாகும்.”

இவ்வாகம வாக்கியத்தால் நாமறிவது சிவமும் சக்தியும் பிரிப்பின்றி ஒன்ருயிருப்பதே என்பதாகும். இக்கருத்தையே ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தில் உள்ள ‘சிவமூர்த்தி’, ‘ஸதாசிவ பதிவ்ரதா’ சிவசக்த்யைக்யரூபிணீ, மனோன்மனீ’ காந்தார்தவிக்ரஹா, லீலாவிக்ரஹதாரிணீ போன்ற தேவியின் நாமங்கள் வலியுறுத்துகின்றன.

இந்தஸ்தோத்திரம் பிரும்மாண்டபுராணத்தில்உள்ளதாகும். ஹயக்ரீவர் அகத்திய முனிவருக்கு பராசக்தியின் பெருமையை இத்தோத்திர வடிவமாக உபதேசித்தருளியிருக்கிருர்.

இத்தோத்திரத்துக்கு சிறந்த தேவிபக்தராகிய பாஸ்கரராயர் என்பவர் ஸம்ஸ்கிருதத்தில் சிறந்த விரிவுரை இயற்றியுள்ளார். அந்த விரிவுரையையும் மற்றும் வரிவஸ்யாரகசியம், நித்யா ஷோட சிகார்ணவம்போன்ற உயர்ந்த நூல்களையும் ஆராய்ந்து அவற்றிலுள்ள விஷயங்களைத் திரட்டி எடுத்து எல்லோருக்கும் பயன்படும் வகையில் தமிழில் இந்த விரிவுரை அமைந்திருக் கிறது. இவ்வுரை ஆசிரியர் பிருமஸ்ரீ இராதாகிருஷ்ணசாஸ்திரிகள்.

தேவியின் நாமாக்களின்பொருளை பலகோணங்களில் ஆராய்ந்து தெளிவாக விளக்கியிருப்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். "மூலமந்த்ராத்மிகா" என்ற நாமத்தின் பொருளை விளக்குகையில் தேவியின் மந்த்ர வடிவமாகிய பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் ஸ்வரூபம் முதலிய விஷயங்கள் நன்கு அமைந்துள்ளன. ஸுதாஸாகரமத்யஸ்தா என்ற நாமத்தில் பொருள் விளக்கத்தில் பராசக்தியின் யந்த்ர வடிவமாகிய ஸ்ரீசக்ரத்தையும் காட்டி யோகினிகளையும்பற்றி எடுத்துரைத்திருப்பது மிகவும் சுவை பயப்பதாக அமைந்திருக்கின்றது. 'ஸர்வதந்த்ரரூபா' என்ற நாமத்தின் விரிவுரையில் சிவாகமங்களைப்பற்றிய விபரங்களைக் குறித்திருப்பது சிறந்த அம்சமாகும். 'மேருநிலயா' என்ற நாமத்தின் பொருளை விளக்குகையில் மந்த்ரங்களை ஜபிக்கும் முறைகளும், சதுஷ்ஷஷ்ட்யுபசாராட்யா" என்பதின் விரிவுரையில் 64 உபசாரங்களையும் எடுத்துக்கொடுத்திருப்பது யாவருக்குப் பயன்தரக் கூடியதாகும்.

ஓரிரு நாமாக்களின் பொருள் விளக்கத்தில் கருத்தை சிரமப்பட்டு புகுத்தியிருப்பதுபோல் தோன்றுகிறது. பத்மநாப ஸஹோதரீ என்ற நாமத்தை பத்மநாபஸ + ஹோதரீ என்று பிரித்து 'ஸ' ஹ்ரீம் எனப் பொருள்கொள்வதும் விச்வரூபா என்ற நாமத்தை வி+ச்வரூபா எனப்பிரித்து நாய் (ஜீவன்) உருவம் அற்றவன் என்று வலிந்து பொருள் கொள்ளாமலிருக்கலாம். ஸஹஸ்ராக்ஷர வித்யா ஸ்தோத்திரத்தை, அதன் பொருளை விளக்குவதோடு, ஸ்ரீ சக்கரத்தின் பாகங்களைக்காட்டி ஆவரண தேவதைகளைப் பற்றிய விளக்கத்துடன் அனுபந்தமாக இணைத்திருப்பதும், தேவியின் பீடங்களை 2 ஆவது அனுபந்தமாக இணைத்திருப்பதும் இந்நூலுக்கு பெருமையைக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

பொதுவாக அந்தந்த நாமாக்களின் பொருள்விளக்கத்தில் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் பல நுட்பமான சிறந்த கருத்துக்களை யாவரும் புரிந்துகொள்ளும் படியாக எளிய தமிழில் கொடுத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். இத்தகையசிறந்தநூலை வெளியிடும் பொறுப்பேற்ற ஸ்ரீ பஞ்சாபகேசய்யர் அவர்களும் ஆஸ்திகர்களின் பாராட்டுக்குரியவராகிறார்.

தமிழில் யாவரும் புரிந்துகொள்ளும்படி அமைந்திருக்கும் இவ்விரிவுரையைப் பயன்படுத்திச் சிறந்த பொருளுணர்ந்து இத்தோத்திரத்தைப் பாராயணம்செய்தும் பராசக்தியின் நாமாக்களைக் கூறி அவளது திருவடிகளை அர்ச்சித்தும் தேவியின் கிருபையைப் பெறுவார்களாக.

P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

திருப்பூவனூர், திருப்பாதாளீச்சரம் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி தாலூகாவில் உள்ளன இத்தலங்கள். தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்களில் சோழ நாட்டுக் காவிரித் தென்கரையிலுள்ள 103, 104 வது தலங்களாக இவை போற்றப்பெறும். திருப்பூவனூர் திருநாவுக்கரசர் அருளிய ஒரு திருப்பதிகத்தையும் திருப்பாதாளீச்சரம் திருஞானசம்பந்தர் அருளிய ஒரு திருப்பதிகத்தையும் பெற்றவை. இவ்விரு தலங்களும் மன்னார்குடிக்கு அருகில் உள்ளன.

1. திருப்பூவனூர்

இத்தலம் நீடாமங்கலம் இரயில் நிலயத்துக்குத் தென் மேற்கே 3. கி. மீ. தூரத்தில் உள்ளது. நீடாமங்கலத்திலிருந்து மன்னார்குடி செல்லும் பேருந்துச் சாலையில் பூவனூர் என்ற பேருந்து நிற்குமிடத்தில் இறங்கி பாமணி ஆற்றைக் கடந்து மேற்கே சிறிதுதூரம் நடந்தால் திருக்கோயிலை அடையலாம். ஆற்றைக்கடக்க நல்ல நடைபாலம் உள்ளது. கும்பகோணம் நீடாமங்கலம் மன்னார்குடி ஆகிய ஊர்களிலிருந்து இத்தலத்திற்குச் செல்லப் பேருந்துகள் பலவும் உள்ளன. இராயபுரத்திலிருந்து இவ்வூருக்கு நேரே வண்டிகளில்வரக் கற்சாலையும் உள்ளது.

தலப்பெருமை :

சமய உலகில் புகழ்பெற்றதொரு தேவாரத் திருப்பதிகத்தைப் பெற்றதலம். ஆலங்குடிக்குத்தெற்கிலும் திருப்பாதாளீச்சரத்திற்கு வடமேற்கிலும் கோயில்வெண்ணித் தலத்திற்குத் தென்கிழக்கிலும் விளங்கும் இத்தலத்தை அடைபவர்களின் பாவங்கள் போகும். வழிபடுவோர் எண்ணங்கள் ஈடேறும். எல்லாச்செல்வங்களும் கிடைக்கும். சிவஞானம் கைகூடும் என்கிறது தலபுராணம்.

பூவனூர்ப் புனிதன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றுயிரம் நண்ணினர்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர்கோவினும் செல்வர்கள் ஆவரே.

என்கிறது அப்பர்சுவாமிகள் தேவாரம். இங்குள்ள ஸ்ரீ சாமுண்டீசுவரி ஆலயம் புகழ்பெற்றது. விஷங்கள் தோஷங்கள் ஆகியவற்றால் துன்புறுவோர் இவ்வம்பிகையை வணங்கி நலம் பெறுகின்றனர். இத்தலத் தீர்த்தங்களில் க்ஷீரபுஷ்கரணியும, (பாற்குளம்) கிருஷ்ணகுஷ்டஹரமும் (கருங்குட்டம்போக்கும் குளம்) மிகப் புனிதமுடையனவாகப் போற்றப்படுவன.

கோயிலமைப்பு :

இவ்வூர் இரண்டு பகுதிகளை உடையது. கீழ்ப்பகுதியில் சிவாலயமும் மேற்பகுதியில் இராமர் கோவிலும் உள்ளன. கோயில் கிழக்குநோக்கிய சந்நிதி. எதிரே க்ஷீரபுஷ்கரணி விளங்குகிறது. இவ்வூரில் வாழ்ந்த திரு. இராசு முதலியார் அவர்களின் திருப்பணிகளோடு பெரியதொரு அழகிய கோயிலாய்ப் பூவனூர் திகழ்கிறது. ஐந்துநிலைக்கோபுரம் கோயிலுக்கு அணிசெய்கிறது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. கோபுர வாயிலைக் கடந்தவுடன் வெளிப் பிராகாரத்தில் சுவாமி சந்நிதிக்குத் தென்பால் வடக்குநோக்கி ஸ்ரீ சாமுண்டீசுவரி ஆலயம் உள்ளது. பலருடைய பிரார்த்தனைகளையும் நிறைவேற்றிவரும் இவ்வம்பிகை இக்கோயிலில் சிறந்த மூர்த்தியாக விளங்குகின்றார். எலிக்கடிக்கு வேர்கட்டிக்கொண்டு இவ்வம்பிகையை வழிபடுவோர் குணம் அடைந்து வருகின்றனர். சர்வவிஷரோகங்களையும் நிவர்த்தி செய்யும் சாமுண்டீசுவரியை மக்கள் பலரும் சிறப்பாகக் கொண்டாடிப் போற்றுகின்றனர்.

சுவாமி சந்நிதியின் வடபால் கோயிலின் முன்மண்டபத்தில் இறைவர்க்குரிய இருபெருந்தேவியர் உள்ளனர். சந்நிதிகள் தெற்குநோக்கியன. இத்தலத்தில் இரண்டு அம்பிகைகள் உள்ளனர்.

இரண்டாவது திருவாயிலைக்கடந்து உள்ளே சென்றால் முதற் பிராகாரம். பிராகாரத்தில் கணபதி, தக்ஷிணாமூர்த்தி, லக்ஷ்மிநாராயணர், அண்ணாமலைநாதர், விசேஷலிங்கம், பசுபதீசுரர், சுப்பிரமணியர், சண்டேசுரர், நவக்கிரகங்கள், சூரியன், பைரவர் உள்ளனர். சந்நிதிக்கு அருகில் பஞ்சமூர்த்திகள் நடராசர் சிவகாமி அம்மை பிட்சாடனர் முதலியோர் திருவுருவங்கள் உள்ளன.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு புஷ்பவனநாதர், சதுரங்கவல்லபநாதர் என்ற திருப்பெயரே பெருவழக்காக வழங்கப்படுகிறது. அம்பிகையரின் திருப்பெயர்கள் அருள்மிகு கற்பகவல்லி, அருள்மிகு இராஜராஜேஸ்வரி என்பன.

ஸ்ரீ சாமுண்டீசுவரி தன்னை வழிபடுவோர்க்கு நலம்பல நல்கும் நாயகியாக இத்தலத்தில் விளங்குகிறார். விஷக்கடிகள், எலிக்கடி, சங்காதோஷம் முதலியவற்றைக் குணப்படுத்தும் இவ்வன்னையின் சந்நிதி இக்கோயிலில் பெருமைக்குரியதாய்ப் போற்றப்படுகிறது. பஞ்சமூர்த்திகள் உள்ளனர். தலமரம் பலா. தீர்த்தம் பாமணிநதி, க்ஷீரபுஷ்கரணி, கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தம்.

தலத்திருப்பதிகம் :

இத்தலத்திற்கு திருநாவுக்கரசு சுவாமிகளின் திருக்குறுந் தொகைத் திருப்பதிகம் (ஐந்தாம் திருமுறை) ஒன்றுளது. இத் திருப்பதிகத்தில் அப்பரடிகள் பூவனூர் இறைவன் திருப்பெயரை பலகாலும் ஓதுபவர் பாவங்கள் தீவினைகள் நீங்குவர் என்றும் இந்திரனைக்காட்டிலும் சிறந்த செல்வராவர் என்றும், மனிதரில் தலையான மனிதராவர் என்றும் கூறுகிறார். இங்குள்ள இறைவன் திருமால், பிரமன், இந்திரன், விநாயகர், முருகன் ஆகியோரால் வழிபடப்பெற்றவர் என்றும் கூறுகிறார். பூவனூர் வெண்ணாற்றின் தென்கரையிலுள்ளது என்றும் குறிப்பிடுகிறார்.

புராண வரலாறுகள் :

ஊழிக்காலத்திற்குப்பின் உலகம் மீளவும் உண்டானபோது சிவபெருமான் உமையம்மையோடு இடபாரூடராய் வான் வழியே உலகைச் சுற்றிப்பார்க்க எழுந்தருளினார். பதினெண் கணங்களும் உடன்வந்தன. இத்தலத்திற்கு அருகில் வந்தபோது புதிய நறுமணம் வீசக்கண்ட இறைவன் மகிழ்ந்து உமையம்மை யோடு இங்குத் தங்கினார். உடன்வந்த சிவகணங்கள் நறுமலர் களால் இறைவனைப்பூசிக்க விரும்பி வேண்டினர். இறைவனும் இசைந்து இத்தலத்தில் சிவலிங்கம்தாபித்துப் பூசியுங்கள். நாம் உமக்கு அருள்புரிகிறோம் என்றார். அவ்வாறே கடம்பவனமா யிருந்த இத்தலத்தில் பதினெண் சிவகணத்தவரும் லிங்கம் தாபித்துப் பூசித்தனர். பெருமான் மகிழ்ந்து அருள்புரிந்து இத்தலம் நாமே விரும்பி உறையும் தலமாய் விளங்கியதால்

எல்லாத் தலங்களிலும் மேம்பட்டு விளங்கும் என்றும் இத்தலத்தை நினைப்பவர் வழிபடுபவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும் என்றும் கூறியருளினர்.

கிருஷ்ணகுஷ்டஹரதீர்த்தம்:

சோழநாட்டில் சித்திபுரி என்ற நகரிலிருந்து அரசு புரிந்த தருமவர்மன் முற்பிறப்பில் கருங்குட்ட நோயோடு தன்னைவந்து இரந்த அந்தணனை இகழ்ந்தனுப்பிய வினையால் அதே கருங்குட்ட நோயை அடைந்து துன்புற்றான். இரேணுகர் என்ற முனிவர் சொற்படி இத்தலத்திற்குவந்து இத்தீர்த்தத்தில் நீராடி பூவனூர்ப் புனிதனை வழிபட்டு நல்லுடல்பெற்று சிவாலயத்தைப் புதுப்பித்து மாசிமக விழாவைக் கொண்டாடினன்.

சதுரங்க வல்லபநாதர்:

தென்பாண்டிநாட்டில் திருநெல்வேலியில் வசுசேனன் என்றொரு மன்னனிருந்தான். அவன் மனைவியின் பெயர் காந்திமதி. இருவரும் சிறந்த சிவபக்தர்களாக விளங்கினர். மகப்பேறு இன்றி மனம்வருந்திய காந்திமதி இறைவனிடம் முறையிட்டாள். இறைவன் உமையம்மையை அவளது மகளாகவும் சாமுண்டியைப் பணிப்பெண்ணாகவும் தோன்றுமாறு அருள்செய்தார். அம்பிகை தாமிரபரணியில் நீராடிய மன்னன் கைகளில் சங்குருவாய் வெளிப்பட்டு அவர்கட்குக் குழந்தையாய்த் தோன்றினள். இராஜராஜேசுவரி எனப் பெயரிட்டு பெற்றோர் குழந்தையைப் பேணிவளர்த்தனர். இராஜராஜேசுவரி எல்லாக் கலைகளிலும் வல்லவளாய் பெண்களுக்குரிய சதுரங்க விளையாட்டில் தேர்ந்தவளாயிருந்தாள். மன்னன் சதுரகங்த்தில் வெல்வார்க்குத் தன் மகளை மணம்முடிப்பேன் என்றுபறை யறைவித்தான். அவளைவெல்வார் யாரும்வரவில்லை. மன்னன், முனிவர் ஒருவர் அறிவுரைப்படி மகள் பரிவாரங்களுடன் பலதலங்களையும் வணங்கிக் கொண்டு பூவனூர் வந்து தரிசித்துத் தங்கியிருந்தான். அப்போது சிவபெருமான் சித்த வேடத்தராய் மன்னனைக் காணவந்தார். பலசெய்திகளின் உரையாடல்களுக்கு இடையில்தான் சதுரங்கவிளையாட்டில் வல்லவர் என்பதைத் தெரிவித்தார். மன்னன் தன்மகளுடன் விளையாடுமாறுவேண்ட பெருமானும் ராஜராஜேசுவரியை வென்றுசதுரங்க வல்லவராயினர். மன்னன் இவருக்கே தன்மகள் உரியவள் என்பதை உணர்ந்தான். அவரை யாவரென அறிந்து கொள்ள விரும்பினன். பெருமான் மறைந்துகாட்சிதந்துமுன்வரலாற்றைக் கூற மன்னன் எல்லா அரசர்கட்கும் ஓலைபோக்கிப் பல வகைச்

சிறப்புக்களுடன் இராஜராஜேசுவரியை இறைவனுக்கு மணம் முடித்துக் களித்தான். அம்பிகையைச் சதுரங்கத்தில்வென்றதால் இறைவன் சதுரங்கவல்லபநாதர் என வழங்கப்பட்டார்.

மைக்க டுத்த நிறத்தரக் கன் வரை
புக்கெ டுத்தலும் பூவனூ ரன்னடி
மிக்க டுத்த விரல்சிறி தூன்றலும்
பக்க டுத்தபின் பாடியுய்ந் தானன்றே,

2. திருப்பாதாளீச்சரம்

இத்தலம் மன்னார்குடி இரயில்நிலயத்துக்கு வடக்கே 2. கி. மீ தூரத்திலுள்ளது. மன்னார்குடிக்குத் தஞ்சை, குடந்தை, திருவாரூர் மாயூரம் முதலிய பலநகரங்களிலிருந்தும் பேருந்துகள் வருகின்றன. மன்னார்குடி பேருந்து நிலயத்திலிருந்து காலை மாலைமட்டும் நகரப்பேருந்துஎண் 3 பாமணி செல்கிறது. பாமணியில் புகழ் பெற்ற உரத்தொழிற்சாலைக்கு வடக்கே கோயில் உள்ளது.

தலப்பெருமை :

இத்தலம் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்திருப்பதிகம் பெற்றது. பாமணி பாம்பணி என வழங்கப்படுகிறது. வட மொழியில் சர்ப்பபுரம் என்று கூறுவர். ஆதிசேடன் தனஞ்செய முனிவராய் அவதரித்தது; புற்றிலிருந்து பெருமான் வெளிப்பட்டு பசுவுக்கு அருள்புரிந்த தலம். பாதாளத்திலிருந்து ஆதிசேடன் தோன்றி வழிபட்டத்தலம். ஆதலால் பாதாளீச்சரம் என வழங்கப்படுகிறது எனக் கூறுவர். சுகலமுனிவர் தங்கித் தவம் புரிந்ததலம்.

கோயிலமைப்பு :

நாட்டுக்கோட்டை நகரத்தாருள் ஒக்கூர் திரு. இலக்ஷ்மணஞ் செட்டியாரின் அழகிய திருப்பணிகளைப் பெற்றுள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. எதிரே நாகதீர்த்தம் உள்ளது. கோயில் வாயிலில் பத்திரகாளிசந்நிதி உள்ளது. இரண்டுபிராகாரங்கள் உள்ளன. நுழைவாயிலைக் கடந்து உள்ளேசென்றதும் சுவாமி சந்நிதிக்கு வடபால் கொடிமரம் நந்தி பலிபீடங்களுக்கு அருகில் அம்பாள்கோயில் உள்ளது. அடுத்து வசந்தமண்டபம் இருக்கிறது.

இரண்டாம் திருவாயிலைக்கடந்து உள்ளே சென்றால் முதற் பிரகாரம்; இங்குவிநாயகர், முருகன்,பஞ்சலிங்கங்கள்,கஜலக்ஷ்மி, துர்க்கை, சரசுவதி, சண்டேசுவரர், நவக்கிரகங்கள், சூரியன், பைரவர் சந்நிதிகள் உள்ளன.

முன்மண்டபத்தில் திருப்பணிச்செட்டியார் உருவம்உள்ளது. மகாமண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் சமயாசாரியர் நடராஜா சிவகாமி தனஞ்சயமுனிவர் மற்றும் பல மூர்த்திகள் உள்ளனர்.

சுவாமி சந்நிதி மிக்க சிறப்போடும் அழகோடும் உள்ளது. சிவலிங்கம் மூன்றுபிரிவுகளாய் அமைந்து செப்புத்தகட்டால் ஒன்றுய்ப் பொருத்தப்பட்டு விளங்குகிறது. பாம்பணி என்பதற் கேற்ப இறைவன் திருமேனியில் பாம்புருவங்கள் உள்ளன. சுயம்புலிங்கம்.

அம்பிகை கோயிலில் அழகிய முன்மண்டபத்தில் தலத் திருப்பதிகம் சலவைக்கல்லில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. தல வரலாற்று ஓவியங்கள் எழுதப்பட்டு உள்ளன.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு நாகநாதர். சர்ப்பபுரீ சுவரர் எனவும் கூறுவர். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு அமிர்த நாயகி. தனஞ்சயமுனிவர் திருவுருவம் தரிசிக்கத்தக்கது. தீர்த்தம் – நாக தீர்த்தம். கயா தீர்த்தம் முதலியன. தலமரம் – மா.

தலத்திருப்பதிகம் :

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய ஒரு திருப் பதிகமும், திருநாவுக்கரசர். சுந்தரர் குறிப்பிட்டுப்பாடிய இரண்டு தேவாரப் பாடல்களும் உள்ளன. ஞானசம்பந்தர் பாடல்கள் தோறும் இறைவன் பாம்பணிந்துள்ளமையைக் குறிப்பிட்டருள் கின்றார். இறைவன் பெருமை பலவற்றையும்கூறி அவன் உறையும் தலம் பாதாள் என்கிறது பதிகம். இத்திருப்பதிகத்தை ஓதுபவர் தேவருலகம் பெறுவர் எனப்பதிகப்பயன் கூறப் பட்டுள்ளது. சுந்தரர் இத்தலத்தைப் பாம்பணி எனக்குறித் துள்ளார். நாவுக்கரசர் இத்தலத்தை வழிபடின் கயிலைகண்ட பயன் கைகூடும் என்றருளுகிறார். ஞானசம்பந்தர், நாவுக்கரசர் காலங்களில் பாதாளீச்சரம் என வழங்கிய இவ்வூர் சுந்தரர் காலத்தில் பாம்பணி எனக் குறிக்கப்படுவதை அறியலாம். பிற்காலச் சோழமன்னர்களின் கல்வெட்டுக்களில் பாம்பணி கூற்றம் எனக் கூறப்படுகிறது.

புராணவரலாறுகள் :

சூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்கட்குக் கூறுவதாகத் தலபுராணம் உள்ளது. சுகலமுனிவர் தன் தாயாரின் அஸ்தி களைக் கங்கையில் கரைக்கக் காசிச்சென்றார். வழியிடையில் இத்தலத்தில் தங்கிநீராடி வழிபட்டு அஸ்தி முட்டையை எடுத்த போது அவை தங்கப்பாளங்களாக இருப்பதைக்கண்டு இத்தலப்பெருமையை அறிந்து இங்கேயேதங்கித் தவம் செய்தார். தான்செய்யும் வேள்விக்காக அவர் வளர்த்து வந்தபசு நாள்தோறும் புற்றில் மறைத்திருந்த இறைவன் திருமுடியில் பால்சொரிந்து வந்ததால் முனிவர்தன் வேள்விக்குப் பயன்படப் பால் போதாமை கருதிப் பசுவைச் சினந்தார். பசு முனிவரது பழியுரைக்கு வருந்திப் புற்றில்சென்று மோதிக்கொண்டு கயை என்னும் குளத்தில்வீழ்ந்து உயிர்துறந்தது. பெருமான் புற்றிலிருந்து வெளிப்பட்டுக் காட்சிகொடுத்து அப்பசுவினிடம் தோன்றும் பஞ்ச கவ்யங்களையும் கோரோசனையையும் ஏற்பதாக அருள்புரிந்தார்.

கல்வெட்டு :

இத்தலத்தைப் பற்றியதாக ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன. இத்தலத் திறைவன் திருப்பாதாளீச்சரம் உடையார். செல்வத்திருவாரூர் வாகீசப்பெருமான் வடகீழ்மடத்துமுதலியார் பிள்ளையின் நிலங்கள் இக்கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. இதில் ஆலாலசுந்தரர் திருமடமும் குறிக்கப்படுகின்றது. இத் தலம் சுற்றவேலி வளநாட்டுப் பாம்பணிக்கூற்றத்துப் பாமணி என இராஜராஜன் காலத்து அழைக்கப்படுகின்றது. இவையன்றி ஸ்ரீ பூதிவிண்ணகர ஆழ்வார்க்கு விளக்கிற்காகவும், வழிபட வருவார்க்கு உணவிற்காகவும் பொன்னும் ஆடும் வழங்கப்பெற்றன.

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினன் புனல்சூடிப் பொற்பமரும்
அன்ன மனநடையா ளொருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினா னுறைகோயில் பாதாளே.

பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த பாதாளைச் சேரப்
பொன்னியன் மாடமல்கு புகலிநகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லா ரெழில்வானத் திருப்பாரே.

“ வில்லியும் - பாரதியும் ”

புலவர் திரு. இரா செல்வக்கணபதி எம். ஏ.

(மலர் 41. இதழ் 2, பக்கம் 93 இன் தொடர்ச்சி)

“ மை கண்ணுக்கு நல்லது ; அழகுங்கூட ; ஆனால், அளவுக்கு மிஞ்சிப் பூசினால் விகாரமாகத் தோன்றுவதுடன் கண்ணே போனாலும் போய்விடும் ; நமது தேசத்தில் ஒரு வேளை இப்படி நடந்திருக்குமோ ?

பாரதியாரின் இந்த ஐயப்பாட்டில் அர்த்தம் இல்லாமல் இல்லை ; நூலாசிரியனை - தங்கள் புலமையால் மறைத்துவிட்டு, தமிழ் இலக்கண - இலக்கியங்கள் பலவற்றின் உண்மை அழகினை நாம் தரிசிக்க இயலாது செய்த உரையாசிரியர்கள் பலர். அவர்கள் புலமை பெரிது. ஆனால் மூலநூலை மறைத்து அங்கே தங்களை நிறுத்திக்கொண்ட குற்றம் பல உரைகாரர்களுக்குப் பொருந்தும். ‘ ஒருவேளை நமது தேசத்தில் இப்படி நடந்திருக்குமோ ? ’ என்ற பாரதியின் உரைக் குறிப்பு ஆழமான சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறது.

சகுனியின் பொய் வழக்கைச் சாத்திரம் எனக் கருதித் தருமன் சூதாடத் துணிந்த செய்தியைப் பாரதியார் வேதனையோடு பாடும் இடம் உண்டு.

பொய் ஒழுக்கை. அறமெனக் கொண்டும்
பொய்யர் கேலியைச் சாத்திரமன்றும்
ஐயகோ ; நாங்கள் பாரத நாட்டில்
அறிவிலார் ; அறம்பற்றுமிக் குள்ளார்
நொய்யராகி அழிந்தவர் கோடி
நூல் வகை பல தேர்ந்து தெளிந்தோம்
மெய்யறிந்தவர் தம்முள் உயர்ந்தோம்
விதியினால் அத்தருமனும் வீழ்ந்தான் ;

இப்பகுதிக்கு அவர் வரைந்த உரை ஆவேசமானவை.

‘ இப்பாட்டுக்களிலே ’ இப் ‘ பூர்வாசாரங்களில் ’ ஆராய்ச்சி இல்லாது பக்தி செலுத்துவோரின் மடமை காட்டப்படுகின்றது ; பழமையிலே பெரும்பகுதி உயர்வு சான்றதுதான் ; அதிலும் பாரத தேசத்தினராகிய நம்மவரின் நடைகள் அறிவும் அறனும்

பொருந்தியனவாகும் ; ஆயினும், இழிந்த அமானுஷ்ய நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன ; என்று நமது முன்னோர் வகுத்த நெறிகளைப் பாராட்டும் அமரகவி, பிடிவாதமான பழமைப் பித்தர்களைச் சாடவும் தவறவில்லை ;

" எனது தந்தை க்ஷயரோகத்தால் இறந்து போனான் ; எனக்கும் க்ஷயரோகம் வந்திருக்கிறது ; எங்கள் பாட்டனுக்கும் இந்த நோயுண்டு. ஆதலால் இந்த நோய் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்னமாட்டேன் ; என்று ஒரு மனிதன் சொல்லுவானானால் அவன் எவ்வளவு பெரிய மூடன்; லோக க்ஷேமத்துக்கும், லோகாபிவிருத்திக்கும் இந்த ' மாமூல் ' பக்தி எத்தனை பெரிய இடையூறு என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை.

இவ்வாறு எழுதும் பாரதியின் அரிய உரைக்குறிப்புக்கள் பல. இனிவரும் பாரதி – பாடல்

பதிப்புக்களிலாவது – இவரது இந்தக் குறிப்புரைப் பகுதியையும் இணைத்துப் பதிப்பிக்கச் செய்ய நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும். நடை எண்ண வேண்டும் என்பது பாரதியின் நோக்கே தவிரக் கருத்தில் உயர்வே, அவரது எண்ணம் என்பதனை இத்தகு உரைப்பகுதிகள் நன்கு விளக்குகின்றன.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திற்கு – அப்போது வெளிவந்து கொண்டிருந்த ' ஞானபானு ' இதழில் ஒரு மதிப்புரை வெளிவந்திருக்கிறது ; 1913, நவம்பர், இதழில் வெளிவந்த அந்த மதிப்புரை தேசபக்தர் ' சுப்பிரமணிய சிவா ' அவர்களால் எழுதப்பட்டது ; பாஞ்சாலி சபதத்தின் கதைபற்றியும் நடை பற்றியும் சிவா கூறுவன பேரழகானவை. அவர் எழுதுகிறார் :–

இது மிக அழகிய வர்ணனைகள் நிறைந்த ஒரு காவியம் ; பிரம்மஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதியார் அவர்களால் இயற்றப் பெற்றது ;

ஆர்ய தர்மங்கள் நிறைந்த, ஐந்தாம் வேதமாகிய மகா பாரதத்தில் பொறுமையே உருவாகவந்த துரியோதனன், தனது தாய் மாமனாகிய குணகேடன் சகுனியைக்கொண்டு பஞ்ச பாண்டவர்களில் முத்தோனாகிய தர்மபுத்திரருடன் அவருடைய ராஜ்யத்தையெல்லாம் பிடிங்கிக்கொண்டு அவரையும், அவரது சகோதரர்களையும், அவர்களது தர்ம பத்தினியாகிய திரௌபதியையும் ஒட்டாண்டிகளாக்கிக் காட்டுக்குத் துரத்த வேண்டும்

என்ற எண்ணத்துடன் சூதாடும்படிச்செய்விக்கின்ற பாகத்தை பிரம்மஸ்ரீ பாரதியவர்கள் செய்யுளில் எழுதியுள்ளார். பாரதி யவர்களின் தமிழ் நடையைப் பற்றியும், செய்யுள் விசேஷத் தைப் பற்றியும், தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம் ; பாஷாபிமானிகளும், தேசாபிமானி களும் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகம் இது ;

பாஷாபிமானிகளுக்கு எழுதியிருப் பதாகப்பாரதிகூறினாலும், சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு, இது, தேசாபிமானிகளுக்கும் உரியது என்ற எண்ணம் ஏற்படுகிறது ; இந்த எண்ணத்தைச் சற்றே விரிவாக ஆராய்வது பாஞ்சாலி சபதத்தைப் பொறுத்த வரை இன்றியமையாதது. இந்திய விடுதலை வேட்கையை உந்தும்வகையில் இந்நூல் ஒரு மறைமுகமானபோர் வாள் என்று கருதப்பட்டது. இன்றும் கருதப்படுகிறது; இதன் உண்மையைச் சீர்தூக்கிப்பார்ப்பது இங்கே வேண்டப்படுகிறது.

காப்பியங்களை – நெடுங்கதைகளை – நடத்திச்செல்வதில் கவிஞர்கள் பல்வேறு யுத்திகளைக் கையாளுதல் மரபு. ஆசிரியரே கதை சொல்வது ஒருவகை. ஆசிரியர் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் பாத்திரங்களை உரையாடவைப்பதன் மூலம் கதை நடத்துவது இன்னோர் வகை. பாத்திரங்களைப் பேசவிட்டு – ஆசிரியர் இடையிடையே இணைப்புரை கூறுவது பிறிதோர் வகை. இம் மூவகையும் தமிழில் உண்டு. தங்கள் உணர்ச்சிகளை எல்லாம் கதைப் பாத்திரங்கள் வழியே வெளி யிடுதல் என்பது ஒருதலை சிறந்த யுத்தி. ஆனல், பெரும்பாலான நேரங்களில் கவிஞர்கள் தங்களையும் மறந்து, கதையை இடை மறித்துத் தங்கள் உணர்வுகளைக் கொட்டித் தீர்த்துவிடுவதும் உண்டு. இளங்கோவடிகள் எந்த உணர்வுகளையும் நேரடியாக வெளிப்படுத்தாமல் – எந்தப் பாத்திரத்தையும் தான் விமர்சனம் செய்யாது – படிப்பவர்களை விமர்சிக்கச் செய்யும் கட்டுப் பாட்டு உணர்வினர். அறநூலாகிய வள்ளுவத்தில், கவிஞன் இடைபுகவே வாய்ப்பில்லை. கம்பர் பல நேரங்களில் உணர்ச்சி வயப்பட்டு உணர்வுகளைக்கொட்டுவார். பாரதியைப்பொறுத்த வரை, பாரதிவேறு–வெடிக்கும் உணர்வுகள்வேறு என்பதில்லை. எதையும் மறைத்துப் பழக்கப்படாத மனம், கவிதையிலும் அதை வெடித்துச் சிதறவிடுகிறது. படைப்பாளனே விமரிச கனாக மாறிவிடும் விந்தையைப் பாரதியின் படைப்புக்களில் பலவாகக்காணலாம்.

வில்லியின் காலம் அரசியல் சமநிலை இல்லாத காலம். ஆனல் அது அவரைப் பாதிக்கவில்லை. அவருக்கு இலக்கியத் தைத்தவிர வேறு சமூகத்தாக்கங்கள் இல்லை. வெளியுலக

நிகழ்வுகள் அவரை அதிகம் சிதைக்கவில்லை. அதனால், உணர்ச்சிக் கூறுகளே வில்லியில் இல்லை என்பதில்லை. நிறைவாக இருக்கிறது. ஆனால், அவை ஆவேசமாக வெளிக் கிளம்பாது, முறையான வெளிப்பாடாகவே அமைகின்றது. பாஞ்சாலியைத் துச்சாதனன், மக்கள் காண வீதியிலே கூந்தல் பற்றி ஈர்த்துவருகின்றான். திரௌபதி நிலை கண்ட மக்கள், பலவாறாக வருந்தி மொழிகின்றார்கள் ; வில்லி, ஊரவர் அவல முற்று மொழிவனவற்றை ஐந்து பாடல்களில் புனைகின்றார்;

இரும்போ நெஞ்சம் ? மாமன் இதற்கு இசைந்தான் ஒக்க
[இருந்தென்பார் ;
பெரும்போர் அரசர் பெண்ணுடனே பிறந்தும் சீறப்பெறார்
[என்பார் ;
பொரும்போர் வீமன் பொறுத்தாலும் பொன்தேர்விசயன்
[பொறான் என்பார் ;
அரும்போர் அரசர் ' தகாது ' என்றால் வருமோ இந்த
[அழிவென்பார் ;

இவ்வாறு பாஞ்சாலிக்காக ஏங்கி ஊரார் மொழிவனவற்றை வியாச முனிவரும் குறித்துள்ளார். இந்தப்பகுதியில் பாரதியின் ஆவேசம் புது உருவம் கொள்கிறது.

'' கக்கக்க என்று கனைத்தே பெருமுடன்
பக்கத்தே வந்துஅப் பாஞ்சாலி கூந்தலினை
கையினால் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான் ;
ஐயகோ ; என்றே அலறி யுணர்வற்றுப்
பாண்டவர்தம் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான் ; வழிநெடுக மொய்த்தவராய்
என்ன கொடுமையிது என்று பார்த்திருந்தார்; ''

இவ்வாறு, நடைமுறை அறிமுகத்தை முடித்துக் கதை சொல்லும் பாரதி, ஊரவர்தம் இரங்கல் மொழிகளைத் தொகுக்க வில்லை ; இது பாரதி வில்லியை வெற்றிகொள்ளும் இடம் ; கவிஞன் படைக்கவந்ததைமறக்கிறான்; உள்ளத்துள்ளேபாரதக் கதை மட்டுமில்லை ; பாரதநாடே விஸ்வருபம்கொள்கின்றது ; ஆங்கிலேயர் கொடுமையும் — நம்மவர்கள் சிலர் அக்கொடு மைக்கு ஆட்பட்டுச் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதும் பாரதி நெஞ்சில் விரிகிறது ; அஞ்சி அஞ்சிச்சாகும் பாரதமக்க ளின் அறியாமை கோபமாக வெடிக்கிறது ; ' ஐயோ ; பாவம் ' என்ற இரங்கள் மொழிகளை அடியோடு வெறுக்கிறது கவிஞன் மனம் ; மாபாரதத்துக்குள் — கவிஞனின் நிகழ்காலப்பாரதம் புகுகிறது. கவிதை புதுவடிவம் கொள்கிறது; (தொடரும்

குடமுழு நந்தீசன்

நக்கீரன் வழியடிமை,

புலவர் திரு. பி. மா. சோமசுந்தரம்.

(மலர் 41, இதழ் 2, பக்கம் 97 இன் தொடர்ச்சி)

மேலும் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், "சைவத் திருநெறித் தலைவருண் முதற்கண் உலகுற்றோன்றித் திகழ்ந்தவ ராகிய திருவாதவூரடிகளது இயற்பெயர், அவரது பெற்றோர் பெயர், மரபு முதலியவற்றைப்பற்றித்திட்பஞ்செறிந்த தெள்ளிய வரலாறில்லாமை தமிழ்மக்கள் தமது பெரியோரைப் "பற்றிய வாழ்க்கை வரலாறுகளைச் செவ்விதின் எழுதிவைத்துப் பாது காக்கும் நல்வழக்கத்தை இடையிடாது மேற்கொள்ளத் தவறினரென்பதை நன்குவிளக்கும் என்று கூறியுள்ளமையைத் தமிழராவார். ஒவ்வொருவரும் நன்கு நெஞ்சிற்பதித்து இனி யேனும் இக்குற்றம் புகாநடையைக் கைக்கொள்வாராக.

இவ்வண்ணமே, "இத்தென்னாட்டில் பல அருளாளர்கள் தோன்றி மறைந்துள்ளார்கள். அவர்களுடைய வரலாறுகளை அவர்கள் இறைவன் திருவடியடைந்தவுடனேயே எழுதி யிருத்தல் வேண்டும். எவருடைய வரலாறும் அவ்வாறு எழுதப் படவில்லை. அந்தந்த அருளாளர்கள் காலத்திருந்த புலவன்மார் இவரென்னை, கல்வியில் என்னினும் மேம்பட்டவரா? இவருடைய வரலாற்றை யான் இயற்றுவேனானால் என்னுடைய தகைமைக்கு இழிவுநேரும், என்று கருதி அச்செயலில் ஈடு பட்டாரில்லை. அந்தச் சான்றோர்களின் அருட்செயல்களை நம் பாதவர்களாகவே இருந்தார்கள். சைவ சமய குரவன்மார் திருவடிப்பேறு எய்திய பல நூற்றாண்டுகட்குப்பின் தோன்றிய சேக்கிழாரடிகள் தேவாரங்களில் அகச்சான்றாகக் கிடைத்தவை களைக்கொண்டும் சமய குரவன்மார்சென்ற ஊர்களில் வழங்கிய செய்திகளைக் கொண்டும் பெரிதும் முயன்று அவர்கட்குப் புராணம் பாடினார். சமய குரவன்மார் காலத்தில் எத்தனையோ புலவர்கள் இருந்திருப்பார்கள். மேற்படி ஆசிரியர்களை மதியா மலும் அவர்களுடைய அருட்செயல்களை நம்பாமலும் இருந்த தனாற்றான் அக்காலங்களிலிருந்த கல்விச் செருக்கு மிக்க புலவர்கள் வரலாறு வரைந்தார்களில்லை.

"வரலாறுகளில் அவரவர்களுடைய நன்மாணுக்கர்களில் கல்விமேம்பாடுடைய ஒருவரால் வரையப்படுவது தலைநிலத்தது எனவும், அவ்வறிஞர்களின் காலத்தே அவர்கள் பெருமை யுணர்ந்தோரால் தூண்டப்பட்டுக் கல்விச் செருக்கற்ற புலவர் ஒருவரால் இயற்றப்படுவது இடைநிலத்தது எனவும், அவர்கள் காலத்துக்குப் பின்னர்ப், பல்லாண்டுகள் கழிந்து எவரேனும் பாடிவைப்பது கடைநிலத்தது எனவும், பகுத்துணர்ந்துகொள்க. "கடைநிலத்கது என்று உரைக்கப்பட்டவற்றில், மெய்யும், பொய்யும் விரவி நிற்கும். நின்று, உண்மை வரலாறுகளையும் நம்புதற்கு இடங்கொடாதிருக்கும். மணிக்கவாசகப்பெருமானர் புராணத்தில் தாய்தந்தையர்கள் பெயர் காணவில்லை. அப் பெருமானர் காலத்திருந்த புலவர்கள் வரலாறு பாடியிருப்பின், இவ்விதக் குறைபாடுநேர்ந்திராது.

"இக்காலத்தே பல்லாயிரமக்கள் பாடிப்பரவும் திருப் புகழைப்பாடியருளிய அருணகிரிநாதப் பெருமான் காலத்தில் இருந்த புலவர்களும் அவரை மதிக்கவில்லை. அதனுலேயே அவருடைய உண்மை வரலாறு தெரிந்து கொள்ளமுடியவில்லை.

"சென்னையில் திருப்புகழ்ச் சங்கங்கள் வைத்து அருண கிரியார் பாடல்களையே பாடிவரும் பல குலத்தினரும் அவரைத் தங்கள் தங்கள் குலத்தவர் என்கின்றனர். அவருடைய வரலாற்றையும் பலர் பலவாருகக் கூறிக் கொள்ளுகின்றனர் அவர் காலத்திலிருந்த புலவர் எவரேனும் அவருக்கு வரலாறு எழுதியிருந்தால் மேற்குறித்த ஐயங்களுக்கு இடம் தந்திராது. அவர் காலத்திலிருந்த புலவர்களின் செருக்கும் அழுக்காறுமே அவருக்கு வரலாறு எழுதாமைக்கு மூலங்களாம்."

எனவரும் பாம்பனடிகளார் திருவுளக் கருத்தும் தமிழராவார் வரலாறு எழுதப் புகாமையால் விளைந்துள்ள இழப்பினை நன்கு விளக்கும்.

இதுநிற்க, தமிழ் வரலாறுடையாரே, அந்நூல்பக்கம் 115-இல் "திருவிளையாடல்களில் அசம்பாவிதமான பல செய்திகள் காணப்படும். அவைகளைத் தொகுப்பதனுல் பயனில்லை என விடுத்தேன். மேற்கண்டவை போன்ற அசம்பாவிதங்களுக்குச் சமாதானம் சொல்ல ஒருவர் முன்வரும் வரையில் சரித்திர ஆராய்ச்சிக்குத் திருவிளையாடல்களைப் பிரமாணமாகக்கொள்வ தற்கில்லை" என்று தென்மொழிப் புராணங்களின் வரலாற்று உணாவின்மையையும், "ஒன்ருேடொன்று முரணுவனவாயும், அசம்பா விதங்கள் பொதிந்துள்ளனவாயுள்ள இக்கதைகளைத்

திரிகாலமுணர்ந்தவரும் பரமசிவனால் தனக்கொப்பானவர் என்று சொல்லப்பட்டவரும், உத்தமோத்தம முனிசிரேஷ்டரு மாகிய அகத்திய பகவான் சொல்லினர் என்பது சரியாமா? பிற்காலத்தவர் மனம்போனவாறு புனைந்து பெரிய முனிவர்கள் பெயரால் வெளிப்படுத்திய கிரந்தங்கள் பலவற்றுள் இவைகளும் சேர்ந்தவை போலும்" என்று அவற்றின் பொய்ம்மை நிரம்பிய கீழ்மையையும் வெளிப்படுத்தியுள்ளார். இவர் காட்டும் ஏனைய நூல்கள் இவற்றினும் தாழ்நிலையன. இதுதெரிந்தும் நந்திதேவர் மாணிக்கவாசகராய் வந்தார் என இந்நூல்கள் கூறவில்லை என்று இவர் தடை எழுப்புவதும் விந்தையேயன்றோ! திருவாதவூரடிகள் புராணமோ அண்மைக் காலத்தது. மேலும் மாணிக்கவாசகர் என்றபெயர் இறைவனால் அருளப்பட்டது. வழுதியின் பெயர் முதலிய கூறுது செல்வது. இது நந்திதேவரைக் குறியாமையால் வருவதோர் இழுக்கின்று. இனி, இன்னோர் நிகழ்த்தும் தடைக்கு அமைதி காட்டி நந்திதேவரே மாணிக்கவாசகராய் வந்தார் என்று மறைமலையடிகள் நிறுவுதலைக் காட்டுவாம்.

"மாணிக்கவாசகர் இந்நிலவுலகத்திற் பிறந்தருளுமுன்னர்ச் சிவபிரானுக்கு அணுக்கராய் அவர்பால் இருந்தனர் என்பதும் பின்னர் அவரது கட்டளையால் மக்கட்பிறவியில் வரலாயினர் என்பதும் அடிகள் தாம் அருளிச்செய்த திருவாசகத்தில் தாமே கூறியிருக்கின்றனர். அது 'நீக்கிமுன்னெனைத் தன்னொடு நிலா வகை குரம்பையிற் புகப்பெய்து' என அதிசயப்பத்து அ-ஆம் செய்யுளில் போந்த அடியால் அறியப்படும். அதன்பொருள்: முன்னே சிவபிரானாகிய தன்னொடு அணுக்கமாய் நின்றஎன்னைப் பின்னொருகால் அங்ஙனம் நில்லாதபடி தன்னினின்றும் நீக்கி இவ்வுடம்பாகிய குடிலினுள் புகுமாறுபுகுத்தி" என்பதாம். எனவே, சிவபிரான்மாட்டு அணுக்கராயிருந்த அடியார் ஒருவரே அங்ஙனம் மாணிக்கவாசகராகப் பிறந்தருளினர் என்பது தேற்றமாம். மேலுலகத்தில் சிவபிரான் மாட்டு அணுக்கராய் நிற்கும் தூயதொண்டர்கள்" சிவகணங்கள் என்று வழங்கப் படுவர். அச்சிவகணங்களுள் தலைவராய் நிற்கும் சிலர்க்கு, 'நந்திகள்' என்னும் பெயருண்மை.

"நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவ ரென்னோடு எண்மரு மாமே"

என்னுந் திருமந்திரத்தில் திருமூலநாயனர் நந்திகள் நால்வரென அருளிச்செய்தவாற்றல் நன்குவிளங்கும். அங்ஙனம சிவகணங்

களுள் தலைவராய் நின்றநந்திகளுள் ஒருவரே மாணிக்கவாசக ராக இந்நிலவுலகில் பிறந்தருளினர். அவ்வுண்மை கண்டே மாணிக்கவாசகருக்குப் பின்வந்த திருநாவுக்கரசுநாயனார்

" குராமலரோ டராமதியஞ் சடைமேற் கொண்டார்
குடமுழநந் தீசனைவா சகனைக் கொண்டார் "

என்று அருளிச்செய்தனர். அற்றேல் நம்பியார் திருவிளையாடல், திருவுத்தரகோசமங்கைப் புராணம், கடம்பவன புராணம் முதலிய நூல்கள் கணநாதர் ஒருவர்வந்து பிறந்தனர் என்று கூறினவே யன்றி அக்கணநாதரை நந்தி என்னும் பெயரால் கூருமை என்னையெனில், கணங்களுள் நாதராய்ச் சிறந்தோர் சிலர்க்கு நந்தி எனும் பெயருண்மை திருமந்திரத்தா லறியப் படுதலின் கணநாதர் எனினும் நந்திஎனினும் ஒன்றேயாம். அவ்வாருயின் ஒரு புராணமாயினும் நந்தி என்று கிளந்து கூறிய தில்லையாலெனின், புராணங்கள் எழுதினோர் மிகுந்த ஆராய்ச்சி யுடையரல்லர். முன்னுள்ள ஒரு புராணம் ஒன்றைச்சொன்னல் பின்வருவோர் அதனை ஆராய்ந்து பாராமல் அதனை அங்ஙனே சொல்லிவிடுவர். இறைவர் செம்படவர், உருவில் சென்று பிடித்ததுகெளிற்றுமீன் என்பது புலப்படத் திருவாதவூரடிகள்.

" கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும் "

என்று கூரு நிற்பர், நம்பியார் தமது திருவிளையாடலில் அதனைச் சுறவுமீன் எனக்கூறுவர் (28-8), பரஞ்சோதிமுனிவரும் அதனை அங்ஙனமே சுறவென ஆராய்ந்துபாராமல் கூறுவர் (57-6), இவ்வாறு புராணவுரைகள் ஆய்ந்து பாராமல் கூறப்படுவனவும் ஒன்ருே டொன்று முரணுகக் கூறப்படுவனவும் பலப்பல. அவை தம்முட் சில மாணிக்கவாசகர் வரலாற்றில் ஆண்டாண்டுக் காட்டி யிருக்கின்ருேம். ஆதலால் இப்புராணங்கட்கு முற் பட்டிருந்த திருநாவுக்கரசர் ' குடமுழநந்தீசன் ' எனக் கூறியது, பிற்பட்ட இப்புராணங்களில் புகன்றபடி இல்லாமை கண்டு அதற்கு வேறுபொருள் பண்ணுவே மெனப் புகுதல் பெரிதும் பிழை பாடுடைத்தாம்." யாம் இதுகாறும் கூறிய வாற்ருல் தென்மொழிப் புராணங்கள் நந்திதேவரே மாணிக்கவாசகராய் வத்தார் என்று கூறினவல்ல என்று எழுந்ததடை தடையுண்டு தளர்ந்து வீழ்ந்தமை பெறப்படும்.

(தொடரும்)

செல்வமுத்துக் குமாரசுவாமி நாமாவளிஇசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் - நீலமணி] [ஆதிதாளம் - சதுஸ்ர நடை

1 அறுமுகச்செல்வா முத்தையா
அருள்தர வருவாய் ,,
உறுதுணை நீயே ,,
ஓங்குரு நாதா ,,

2 வயலூர் வாழும் ,,
வள்ளி மணாளா ,,
தயவுடன் காப்பாய் ,,
சண்முக நாதா ,,

3 தமிழ்வளர் வேலூர் ,,
சற்குருநாதா ,,
அமரர்கள் தலைவா ,,
அபயம் அபயம் ,,

4 சங்கரன் புதல்வா ,,
சாமிநாதா ,,
மங்கள வடிவே ,,
மயில் வாகனனே ,,

5 அல்லல் தீர்ப்பாய் ,,
ஆறுதல் தருவாய் ,,
செல்வக்குமரா ,,
சிங்காரவேலா ,,

6 கண்ணின்மணியே ,,
கருணைக்கடலே ,,
எண்ணம் முடித்தருள் ,,
இன்பம் தந்தருள் ,,

7 ஓராறு முகவா ,,
உண்மைப்பொருளே ,,
ஈராறு கையனே ,,
ஏழைமுகம்பார் ,,

8 உய்வழி அருள்வாய் ,,
ஒளிவளர் விளக்கே ,,
செய்பிழைபொறுப்பாய் ,,
செந்தில் வேலா ,,

9 தஞ்சம் அடைந்தேன் முத்தையா
தையல் மகனே ,,
குஞ்சரி கணவா ,,
குறைதீர்த்தருள்வாய் ,,

10 வடிவேலரசே ,,
வாழும் வகையருள் ,,
அடியார்க்கெளியாய் ,,
அருகில் வருவாய் ,,

11 முத்தமிழ்த் தலைவா ,,
முழு மணித் திரளே ,,
தத்துவப் பொருளே ,,
சரணம் சரணம் ,,

12 என்றும் இளையாய் ,,
ஏரகச் செல்வா ,,
குன்றில் உறைவாய் ,,
குற்றம் களைவாய் ,,

13 பன்னிருகைய்யா ,,
பாதம் பணிந்தேன் ,,
உன்னருள் தருவாய் ,,
உச்சியில் வைப்பாய் ,,

14 கார்த்திகை மைந்தா ,,
கருணாநிதியே ,,
ஏத்திப் பணிந்தேன் ,,
என்றும் நீயே துணை ,,

15 அடைக்கலம் புகுந்தேன் ,,
அணைத்தெனைக் காப்பாய் ,,
கடைக்கண் பாராய் ,,
கண்கண்ட தெய்வமே ,,

16 கருத்தில் உறைவாய் ,,
கந்தசாமியே ,,
வருவினை தீர்ப்பாய் ,,
வருக வருகவே ,,

குமரி (Indian Aloes)

தஞ்சை. திரு. நா. தனுக்கோடி,

மருத்துவ அலுவலர், திருநெய்ப்பேர். 610 103

கற்ருழை நம் நாட்டில் யாவரும் அறிந்த மூலிகை, இதில் பலவகைகள் உண்டு. சிறுகற்ருழை, பெருங்கற்ருழை, பேய்க் கற்ருழை, செங்கற்ருழை எனப் பல்வகைப்படும். சிகப்பு வகை கிடைப்பதரிது. இது இரும்பைப் பொன்ணுக்கும் என்று பதார்த்த குண சிந்தாமணி கூறுகிறது. இது பலவகைப்படினும் பொதுக் குணமும், செய்கையும் சற்றேறக்குறைய ஒத்தேயிருக்கும். நம் நாட்டு மருத்துவத்தில் குமரி, கன்னி என்னும் சிறப்பு பெயர் கொண்டது. குமரிக்கு, மேகம், கிருமியால் வரும் குற்றம், மூலம், சரீரஎரிவு, வயிற்றுநோய், கணச்சூடு இவைகளை நீக்கக்கூடியது, மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் "குமர்யாஸமம்" கதநிக்ரஹம், யோகரத்னகரம், சாரங்கதரஸம்ஹிதை முதலிய வைத்திய நூல் களில் சொல்லியபடித் தயாரித்துப் பலநோய்களை நீக்கும் மருந் தாக கையாளப்படுகிறது.

கண்சிகப்பு, அடிபட்டதற்கு :— சதைப்பற்றுள்ள கற்ரு ழையைத் தணல் நெருப்பில் பக்குவமாய் வாட்டி எடுத்து நன்கு குளிர்ந்தபின், ஒருபுறம்தோல்நீக்கி, வேண்டிய அளவு கண்ணில் மேல் வைத்துக்கட்ட வேதனை மாறும்.

குமரிச்சாறு :— தோல்நீக்கி உட்பாகத்தை மட்டும் சிறு துண்டுகளாய் மண் அல்லது பீங்கான் பாத்திரத்தில் இட்டு, கடுக்காய் சூரணம் தேக்கரண்டி கலந்து சிறிதுநேரம் கழித்து பிசைந்து வடிகட்டிக்கொள்ளவும். வேளைக்கு 100 மில்லி அளவு இருவேளையும் பருகவும், புளிநீக்கிய உணவுகொள்ளவேண்டும். கருப்பை மூத்திரகோசம், இவை சம்மந்தமான ரோகங்கள்கள், மேல்நாட்டு மருத்துவமுறைக்கு நீங்காத ரோகங்களும் நீங்கி குமரியாய் வாழலாம். குறைப்பிரசவத்தாலும், அதிக பிரசவத் தாலும் தளர்ந்த தேகமும் இச்சாபத்தியமாய் மண்டலம் பருகி வந்தால் கன்னிபோல் தோற்றமளிக்கும்.

கால் ஆணிக்கு :— கற்ருழையை இரண்டாகப் பிளந்து காலாணிமேல் வைத்து தொடர்ந்து கட்டிவர ஆணி மறையும்.

இறைந்த சீழ்மூலங்களுக்கு :— மேற்சொல்லிய குமரிச் சாற்றைப் பீச்சாங்குழல் மூலமாய் (Rcetal – Syringe) உட் செலுத்திஞல் நிச்சயமாய் நோய் நிவர்த்தியாகிறது.

இலகுகுமரித் தைலம் :— குமரிச்சாறு மூன்றுசேர், பசுவின் பால் இரண்டுசேர், எள்ளெண்ணை அல்லது தேங்காய் எண்ணை மூன்றுசேர், நற்சீரகம் ஒரு தோலா, பசுவின்பாலில் அரைத்து குழப்பிய சீரகம் கருகாமல் காச்சி வடிக்கவும், சிரநோய்கள், பொடுகு, சொறி, தோல் சம்மந்தமான நோய்கள் தீரும். ஜகன் மாதா, பராசக்தி, கன்யாகுமரி அருளால் யாவரும் நலமாய் வாழ்வோமாக.

ஆறு வயது ‘அறிஞன்’!

ஆறு வயது என்பது பொதுவாக ‘அரிச்சுவடி’ படிக்கும் வயதுதான். ஆனுல் ஆறேவயதான ஒரு சிறுவன் சமஸ்கிரு தத்தில் பகவத்கீதையை ‘மடமட’ வென்று ஒப்பிக்கிருன். அதற்கு ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும், மராத்தியிலும் விளக்கம் கூறுகிருன்.

‘இதெல்லாம் எந்தக்கதையில்’ என்று கேட்காதீர்கள். இதுகதையோ, கற்பனையோ அல்ல. கண்கூடான உண்மை!

அந்த அதிசய சிறுவனின் பெயர் சஞ்சீவி சர்மா.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நேரம். அறிஞர்கள் நிறைந்த அரங்கம். பத்திரிகை நிருபர்களும் சென்றிருந்தனர். சஞ்சிவி சர்மா தனது ஆற்றலை மெய்ப்பித்தான். அறிஞர்களே அசந்துபோனுர்கள்.

இதுமட்டுமல்ல, ஆச்சார்ய விஞேபாபாவே மராத்தியில் எழுதியுள்ள கீதையின் கவிதை வடிவையும் சர்மா ஒப்பிக் கின்ருன்.

நன்றி. மதுரை தினமணி 3—2—82.

வாசகர் கடிதங்கள்

V. G. இராமமூர்த்திசிவம்

"சமரச குமர குடில்" செயங்கொண்டசோழபுரம்

15—12—81

* கார்த்திகைமாத "ஞானசம்பந்தம்" இதழில் சுவாமியின் "ஆவணிமூல" ஆசியுரை முழுதும் படித்து இன்புற்ரேம். எத்தனை அரிய கருத்துக்களை எளிய முறையில் சுவாமி அருளியிருக்கிறீர்கள்! குறிப்பாக அறிவும் தொழிலும் - தலைப்பில் சுவாமியின் விளக்கமுறை இதுவரை யாரும் கூருதது!

அடுத்து புலவர் இரா. செல்வக்கணபதியின் "வில்லியும் - பாரதியும்" கட்டுரை பாரதிக்குசெலுத்தும் அஞ்சலி. மிகபாராட்டத்தக்கதாக உளது. அடுத்து வழக்கமாய்வரும், அபிராமி அந்தாதியின் பொருள் விளக்கம், தவருமல் எளியேன் வாசித்து வருகிறேன். லலிதா சகஸ்ரநாம பாஷ்யத்திலிருந்து ஆசிரியர் எடுத்தாளும் உபமான - உபமேயங்கள் அற்புதம். பல உண்மைகளை 21 ஆவது பாடலாகிய மங்கலையின் தொடங்கும் பாடல் தெளிவாக்கியது. ஆசிரியரின் திறனுய்வுபோற்றத்தக்கது.

குறிப்பாக, இதழில் வந்துள்ளவைகள் அனைத்துமே பாராட்டப்படத்தக்கது.

★

S. SIVAKUMAR M. A. Madras - 600 020
International Lecturer In Hinduism
Specialist In Handloom &
Powerloom Textiles.

14—12—81

* ஞானசம்பந்தம் 11—12—81 இதழின் ஆவணிமூலவிழா ஆசியுரை என் உள்ளத்தை உருக்கியது. இவ்வாறு திருவாசகத்திற்குக் குருமகாசந்நிதானம் விளக்கவுரை அருளினல் மக்கள் மனம் திருந்தி நல்வாழ்வு பெறுவர். தொடர்ந்து ஞானசம்பந்தம் இதழ் மூலமாகவேனும் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்களின் அருளுரை வெளிவரவேண்டுமென்று திருவருளையும் குருவருளையும் பிரார்த்திக்கின்றேன்.

G. S. முத்துசாமி, நரசிங்கன்பேட்டை
ஸ்ரீ ஷண்முகா பிரஸ், தஞ்சாவூர் ஜில்லா

* ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரையில் "பகைவனுக்கும் அருள்வாய்" என்பதுபற்றிக் கூறியுள்ளதை வாசித்தபோது மனம் மிகவும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியது.

"இந்து மதத்தை வாழ விடுங்கள்" படித்தேன். நம் மதத்திற்கு ஏற்பட்டுள்ள பயங்கரச் சூழ்நிலைகள் பற்றி எண்ணி எண்ணிவருந்தினேன். இதைப் படித்தபோது என்னிடத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இதை வெளியிட்டதாங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

அனைத்தையும்விட மிகச் சிறப்பானது, மாதாமாதம் பாடல் பெற்ற தலங்களுக்குச் சென்று, அத்தலம் பற்றி விளக்கம் எழுதுவது மிகச் சிறப்புடையதாகும். ஏனெனில் தெரியாத தலங்கள் பற்றித் தெரிந்துகொள்ள ஓர் நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. "எதிர்காலம்" வெளியிடுவதும் நன்மை தருவதாக உள்ளது. *

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு 12—1—82 செவ்வாய்க்கிழமை யன்று காலை திருப்பூவனூர் ஸ்ரீ புஷ்பவனநாதர் ஆலயத்திலும் மாலை திருப்பாதாளீச்சரம் ஸ்ரீ நாகநாதர் ஆலயத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தலத் திருப்பதிகப்பாராயணம் நிகழ்வுற்றது. மாலை ஸ்ரீ நாகநாதர் ஆலயத்தில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ. அவர்கள் தலத் திருப்பதிகங்களை விளக்கி உரையாற்றினர். ஆதீனத் திருக்கூட்டத்துஅடியவர் ஸ்ரீநெல்லையப்பசுவாமிகள் 'ஆலயவழிபாடு, என்ற தலைப்பில் உரையாற்றினர். அச்சிடப் பெற்ற தலத் திருப்பதிக நூல் வந்திருந்த அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது. அன்பர்பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகேட்டுப் பயனுற்றனர்.

ஸ்ரீல ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள்

குருபூஜை விழா

தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா மார்கழித்திங்கள் 28 ஆம் நாள் (12—1—82) செவ்வாய்க்கிழமை யன்று குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றினார்கள்.

ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், மாயூரநகர அன்பர்களும் மற்றும் பலரும் வந்து வழிபட்டுக் குருவருட் பிரசாதம் பெற்று உய்ந்தனர். மாலை வழிபாட்டின்போது

"சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்" என்னும் நூல் விழா மலராக வெளியிடப்பெற்று, அன்பர்கட்கு வழங்கப்பட்டது. காலை வழிபாட்டின் பின்னர், 'சிவஞானபோதம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன. வித்துவான். திருமதி. ப. நிலா எம். ஏ. 'ஸ்ரீ மெய்கண்டார் அருள் வரலாறு' பற்றியும் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. 'சிவஞானபோதம் அமைப்பும் அழகும்' என்பது பற்றியும் வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. 'பிரமாணஇயல்' பற்றியும், வித்துவான். திரு. சொ. முத்தையன் எம். ஏ. 'இலக்கண இயல்' பற்றியும் வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட். 'சாதன இயல்' பற்றியும் சென்னை இலயோலாகல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர் திரு. அ. பாலருவாயன் எம். ஏ. அவர்கள் 'பயனியல்' பற்றியும் விரிவுரையாற்றினர். மாலை 6 மணியளவில் ஆதீனத் திருக்கோயில் திருமுறைப் பணியாளர்களின் திருமுறை இசையரங்கு நிகழ்ந்தது. பின்னர் வழிபாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்பு மகாவித்துவான். திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் சிவஞானபோதச் சிற்றுரைக்கு தாம் எழுதிய விளக்கம் பற்றி உரை நிகழ்த்தினுர் கள். அன்பர் பலர் வழிபட்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

வைத்தீசுவரன்கோயிலில்
தைச்செவ்வாய்த் திருவிழா

தருமை யாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீஸ்வரன் கோயில் என வழங்கப்படும் திருப்புள்ளிருக்குவேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குத் தைச்செவ்வாய்த்திருவிழா 31—1—82 முதல் 9—2—82 வரை மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில் காலை மாலை விசேஷ அபிஷேக ஆராதனை கள் நடைபெற்றன. 8—2—82 திங்களன்று திருத்தேரில் பவனி வரும் காட்சியும் 9-2-82 செவ்வாயன்று சித்தாமிர்ததீர்த்தத்தில் கடைச்செவ்வாய்த்தீர்த்த விழாக் காட்சியும் நிகழ்வுற்றன. நாள்தோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதியில் தருமை யாதீனப் பல்கலைக் கலூரிப் பேராசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் முருகப் பெருமானைப் போற்றித் துதிக்கும் அருள் நூல்கள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். தேவஸ்தானத் திருமுறைப் பணியாளர், "திருமுறைக் கலாநிதி" திரு. க. சொக்கலிங்க ஓதுவார் அவர்கள் நாள்தோறும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினுர். அன்பர்பலர் பெருமானை வழிபட்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

திருக்கடவூர்

ஸ்ரீ அபிராமி பட்டர் அருள்பெறு திருநாள்

மகந்யாச பூர்வக ஏகாதச ருத்ரா பிஷேகம் ஸ்ரீ அபிராமி அம்மை உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீஅமிர்தகடேசுவரசுவாமிக்கு 24—1—82 ஞாயிற்றுக் கிழமை, ஸ்ரீ அபிராமிபட்டர் அருள்பெற்ற நாளாகிய தை அமாவாசை நாளில் காலே 10 மணியளவில் மகந்நியாச பூர்வக ஏகாதச ருத்ராபிஷேகமும் அலங்கார ஆராதனேகளும் இரவு ஸ்ரீ அபிராமி அம்மைக்கு விசேஷ அலங்காரமும் நவசக்தி அருச்சனேயும் அபிராமி அந்தாதி பாராயணமும் நிகழ்வுற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடு ஆற்றி, அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினுர்கள். உலகநலம் கருதிய இவ்விழாவை மதுரை சிவகாமி மில் அதிபர் கருமுத்து. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தம் உபயமாகச்செய்து வருகின்ருர்கள். விழாவில் அன்பர் பலர் கலந்துகொண்டு தரிசித்துப் பயன்பெற்றனர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில் திருவெம்பாவை நிறைவுவிழா ஸ்ரீ மீனுட்சிசுந்தரேசுவரர் திருக்கோவில் சங்கத்தார் மண்டபத்தில் நடைபெற்றது.

புலவர் சி. கல்யாணசுந்தரனுர் தலேமையில் சிவபுராணம் ஓதிக்கொண்டு திருக்கோயிலே வலமாக வந்து மன்றத்தினர் வழிபாடு செய்து கொண்டனர். மன்றப் பொருளாளர் யாழ். திரவியம் வரவேற்றுப் பேசினுர். இசைக்கல்லூரிமாணவர் கு. மணிகண்டஓதுவார் என்ற தாண்/டவமூர்த்தி திருவெம்பாவை முழுவதையும் பல்வேறு பண்ணில் இசைத்து ஓதினுர். மன்ற அமைப்பாளரும் செயலாளருமான வித்துவான். தா. குருசாமி ஓதுவார் திருவெம்பாவையின் உட்பொருளேப் பல்வேறு உரையாசிரியர்கள் கருத்துக்களேயும் உள்ளடக்கி விரிவுரைசெய்தார். மன்றத்தின் சார்பில் மாணவி சண்பகவல்லி மங்கையர்க்கரசி சிறப்புப் பரிசுபெற்றனர். செயலாளர் வித்துவான் தா. குருசாமி ஓதுவார் நன்றி கூறினுர்.

நன்றி. — தினமணி. 30—1—82.

ஆவுடையார்கோவிலில் திருவாசக விழா

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்ற அன்பர்கள் பதினோராவது கூட்டு வழிபாடு நிகழ்த்த ஆவுடையார்கோவிலுக்கு இராம. முத்துப் பழநியப்பசெட்டியார் தலைமையில் சென்றனர். ஆவுடையார் கோவிலில் திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்களை க. வெள்ளைவாரணனார் தலைமையில் பாடினார் முத்து தேசிகர். திருவாசகப் பாராயணத்தைத் தொடங்கிவைத்தார். வித்துவான். தா. குருசாமி தேசிகர் கு. மணிகண்டன், யாழ். சீதாராமன் முதலிய ஓதுவார்களுடன் திருக்கோவில் ஓதுவாமூர்த்தியும் கலந்துகொண்டு, திருவாசகம் திருப்பெருந்துறை பற்றிய பதிகங்களை முற்றும் ஓதிப் பாராயணம் செய்தனர்.

திருமுறை விளக்கக் கூட்டத்தை தமிழவேள் பி. டி. ஆர். கமலதியாகராஜன் தொடக்கிவைக்க, மதுரை திருமுறைக் காவலர் திரு. இராம. முத்துபழநியப்ப செட்டியார் தலைமையில் தொடங்கியது. மதுரை பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் திருவாசக அனுபவங்களை விளக்கி உரையாற்றினார். மதுரைப் பல்கலைக் கழக சைவத் துறைத் தலைவர் முதுபெரும்புலவர் க. வச்சிரவேல் முதலியார் திருவாசகத்தில் திருச்சதகம் அமைந்த பாங்கினையும், தத்துவங்களையும் விளக்கி உரையாற்றினார். மேற்படி பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை, ஆவுடையார் கோயில் திருவாசகம் பிறந்த மண் என்று குறிப்பிட்டார். மன்றச் செயலர் வித்துவான் தா. குருசாமி தேசிகர் நன்றி தெரிவித்துப் பேசினார்.

நன்றி —தினமணி 5—11—81.

மதுரை – பிரதி ஞாயிறு

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

திருமுறைக் கூட்டு வழிபாட்டு விழாக்கள்

தருமையாதீனகர்த்தரின் ஆணையின் வண்ணம் பிரதி ஞாயிறு தோறும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்ற சார்பாக நடைபெறும் திருமுறைக் கூட்டு வழிபாட்டு விழாத் தொடரின் பதினாறுவது வழிபாட்டு விழா மதுரை ஸ்ரீ மீனாட்சி கோயில் சங்கத்தார் மண்டபம் முன்னிலையில் நடைபெற்றது. மன்ற அன்பர்கள் புள்ளி விவர அதிகாரி எஸ். நமசிவாயம் தலைமையில் வலமாக வந்து வழிபாடு நிகழ்த்தினர். மதுரைப் பல்கலைக்

கழகத் தமிழியற்புலத்துறை மகாவித்துவான். மு. சண்முகம் பிள்ளை தலைமை வகித்தார். நக்கீரர் அருளிய கோபப்பிரசாதம், பெருந்தேவபாணி ஆகிய பாடல்களை வித்துவான். தா. குருசாமி தேசிகர் கு. மணிகண்டன் பாராயணம் செய்தனர்.

பேராசிரியர், க. வெள்ளைவாரணனார், க. வச்சிரவேல் முதலியார் விரிவுரை வழங்கினர். மதுரைப் பல்கலைக்கழக கல்வெட்டு ஆய்வுப் பேராசிரியர் இரா. கோவிந்தராசன் நக்கீரர் வரலாற்றை விளக்கிப் பேசினார். மன்ற அமைப்பாளர் வித்துவான். தா. குருசாமி தேசிகர் நன்றி நவின்றார்.

ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்றம் சார்பாக நடைபெறும் திருமுறைக் கூட்டு வழிபாட்டுத் தொடரின் பதினேழாவது வழி பாட்டு விழா மதுரை ஸ்ரீ சங்கத்தார் மண்டபத்தில் நடை பெற்றது. மன்ற அன்பர்கள் மன்றத் துணைச்செயலர், சி. கல்யாணசுந்தரனார் தலைமையில் ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் கோவிலை வலமாக வந்து திருவாசகப் பாராயணம் செய்து கொண்டே வழிபாடு செய்தனர். புலவர் சி. கல்யாண சுந்தரனார் தலைமை யில் பதினேழாவதுவழிபாட்டுத் திருமுறையாக நக்கீரர் அருளிய பதினோராந் திருமுறையில் உள்ள கார் எட்டு. ஈங்கோய்மலை எழுபது பாடல்களை மன்ற அமைப்பாளர் வித்துவான். தா. குருசாமி தேசிகர் பாராயணம் செய்து விரிவுரை செய்தார்.

தலைவர் ஈங்கோய்மலை வரலாற்றையும், இலக்கிய நயத்தை யும் விளக்கிப் பேசினார். மன்ற அமைப்பாளர் 'வித்துவான். தா. குருசாமி தேசிகர் அனைவரையும் வரவேற்று நன்றி கூறினார். யாழ். சீதாராமன், எஸ். நமசிவாயம், கு. மணிகண்டன் திருமுறை ஓதினர். நன்றி —*தினமணி 15, 17-12-81.*

கடிதம்:

பெ. தீர்த்தகிரி,

அம்பாள் சைகிங் மில்ஸ், 26 சீரங்கவீதி, ஈரோடு.

3—2—1882

* இந்த தெய்வீகப் பணிக்காக தங்கள் இதழுக்கு ஆயுள் சந்தாதாரராக சேர்ந்திருப்பது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்படுகின்றது. மேன்மேலும் தங்கள் பணி சிறப் பாக நடைபெற எல்லாம்வல்ல இறைவன் திருவருள்புரிவாராக! நாளும் நலமே சூழ்க !

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதிஞூ மாசிமீ 1உ முதல் 29உ முடிய)

(13—2—1982 முதல் 13—3—1982 முடிய)

ஸ்ரீ துன்மதிஞூ தைமீ 30உ சுக்கிரவாரம் ஹஸ்த நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 34 நாழிகை 47 விஞடிக்கு சிம்மலக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மகர ராசியிலிருந்து கும்பராசி சங்கிரமணமாக மாசிமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். மறுதினம் ஸ்திரவாரம் மாசிமாதம் முதல்தேதியாகிறது. சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனுவது லோகத்தில் எங்கும் உணவு தானியங்களின் விளைவு மிகுந்துவரும். ஆசியாவின் தென் மேற்கில் யுத்தபயமும் ஸ்தம்பன நிலைமையும் ஆகும். சர்வேஸ்வரனுடைய அருளினுல் லோகம் நடக்கவேண்டி நாட்டுக்கு நாடு சமரசம் ஏற்படும். ஏற்றுமதி இறக்குமதிகளில் துரிதம் ஏற்படும். லோக பிரஜைகள் மதிநுட்பத்தினுல் பல தொழில் களிலும் திறமையாக செயலாற்றுவர். தேசங்களில் எங்கும் சிவபுண்ணிய காரியங்கள் நடைபெற்றுவரும். ஆலயங்களில் லோக சுபிட்சார்த்தயாக வேள்விகள் மூர்த்திகளுக்கு இலட்ச கோடி அருச்சனைகள் நடைபெற்று வருவதினின்றும் லோகமெங்கும் சுபிட்சம் நிலவும். தேசங்களில் ஆளுநர்கள் செங்கோல் ஆட்சிபுரிந்து பிரஜைகளை இரட்சிப்பார்கள்

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்கள் ஈஸ்வரத் தன்மையில் திருவிற்றுள்ள சிவஞானகுருமகான்கள் லோக பரிபாலனம் செவ்வையாக நடைபெற அறவழிகளைப்போதித்து அனுக்கிரகம் செய்தருள்வார்கள். சிஷ்யகோடிகளுக்கு ஞான தீட்சை செய்து அருள்செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெறும். பிரஜைகள் எல்லோரும் தேவாலயம் சென்று இறைவனை வழிபட்டு தூயவர்களாவார்கள்; நற்பணிகள் புரிந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

மகா சிவராத்திரி

குறிப்பு :- ஸ்ரீ துன்மதிஞூ மாசிமீ (22—2—1982) சோமவாரம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி சிரவண நக்ஷத்திரம் கூடிய புண்யகாலம், இத்தினத்தில் எல்லோரும் சிவத்தியானத்துடன் பகல் உபவாசமாயிருந்து இராத்திரி நான்கு சாமத்திலும் நித்திரை நீக்கி சிவபெருமானைப் பூசைசெய்தல் வேண்டும்.

நான்கு கால பூஜையின் விதி முறைகள்

காலம்	அபிஷேகம்	வஸ்திரம்	பத்திரம்	கந்தம்	தூபதீபம்	நிவேதனம்
முதல்காலம்	பஞ்சகௌவியம்	செம் பட்டு	வில்வம்	பச்சைக் கற்பூரம்	சாம்பிராணி சந்தனக் கட்டை புஷ்ப தீபம்	பாற் பொங்கல்
2வது காலம்	பஞ்சாமிர்தம்	மஞ்சள் பட்டு	குருந்தை	அகிற் சந்தனம்	குங்கிலியம் நக்ஷத்திர தீபம்	சர்க்கரை பொங்கல்
3வது காலம்	பாலோதகம்	வெண்பட்டு	கிளுவை விளா	கஸ்தூரி சேர்த்த சந்தனம்	குங்கிலியம் ஐந்துமுக தீபம்	எள்ளோதகம்
4வது காலம்	கந்தோதகம்	நீலப் பட்டு	கரு நொச்சி	புனுகு சேர்ந்த சந்தனம்	கற்பூரபவிர் வார்த்தி	சுத்தான்னம்

மேற்கண்ட நான்குகால பூசைகளுக்கும் விதித்திருக்கிற திரவியங்கள் அபிஷேகத்துடன் பத்திரபுட்ப சித்திரான்னங்களுடன். சோடசோபசார தீபாராதனைகளும், அஷ்ட புஷ்ப மந்திர விதி முறைகளும் குரு மூலமாக தீட்சை பெற்றுணர்ந்து பின்னர் நடத்த வேண்டியது. அவ்விதம் சிவபூசை எடுத்துக்கொள்ளாதவர்கள் சிவாலயம் சென்றுசிவனுக்கு அபிஷேக முதலான பூசைகள் செய்வித்து தரிசனம் செய்யவேண்டும். கண் விழிக்க இயலாதவர் இரவு 14 நாழிகை முதல் $3\frac{3}{4}$ நாழிகை லிங்கோற்பவகாலம். அந்தகாலத்தில் அவசியம் சிவதரிசனம் செய்ய வேண்டும்.

சிவராத்திரி புண்ணிய காலத்தில் தானம் பண்ண வேண்டியவை சிவலிங்கம், உருத்திராக்கம், விபூதிப்பை, நவரத்தினம், பொன், வெள்ளி, கோ, பூமி முதலியனவாகும். இதில் முடிந்த வரையில் செய்யலாம். மறுதினம் பிராமண சந்தர்ப்பணையும் மகேஸ்வர பூசையும் நடத்த வேண்டியது. இந்த நியமத்தினால் மேலான புண்ணிய பலன் கிடைக்கும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் மதிப்புடன் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நல்ல ஸ்திதி ஏற்படும். இரத்தினபூஷணம் தரும். வீடு வாகனங்கள் இயந்திர சாதனங்களில் நவீனம் பொருந்தி நல்ல அனுபோகம் தரும். அரசாங்க கௌரவப் பட்டம் தரும். நல்லோர் பிரபலஸ்தர் போற்றுவர். எல்லா காரியங்களும் ஜெயபிராப்தியாக நடைபெற்று வரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். பிப்ரவரி 13, 14, 15, 21, 22, 23, 24, 25, 28 மார்ச்சு 1, 4, 5, 6, 7, 10, 11, 12, 13 தேதிகளில் தனுதாயம் தரும். பட்டம் பதவி பெறுதல் ஆகும். பிப்ரவரி 16, 17 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபி விருத்தியில் பணவருமானம் வந்துகொண்டிருக்கும். மார்ச்சு மீ 4 தேதியானுல் பிரிந்துள்ள உறவினர் ஒருவர் ஒன்று கூடுவர். முயற்சிக்கின்ற காரியங்கள் திருப்திகரமாக நடக்கும். வீடு வாகன பிராப்தியில் பூர்வப்பொருளில் நல்லன உருவாகும். புத்திரர்களின் கல்வி கலை உத்தியோகங்களில் நற்பலனை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். பிப்ரவரி 14, 15, 16, 17, 23, 24, 25, 26, 27 மார்ச்சு 2, 3, 6, 7, 13 தேதிகளில் தனுதாயம், நல்ல வாய்ப்பு, சத்துரு பங்கம் ஏற்படும். பிப்ரவரி 18, 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பஅபி விருத்தியில் நல்ல பண வருமானங்களை ஏற்படுத்தி வரும்.

சகோதரருக்கு பிரபலஸ்தர் நட்பு செல்வாக்கு ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் ஒப்பந்தம் செய்த வகைகளில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். தாம்பத்திய வாழ்வில் மன நிம்மதி தரும். பிப்ரவரி 16, 17, 18, 19, 20, 26, 27, 28 மார்ச்சு 1, 4, 5, 8, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டேடோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். எல்லா காரியங்களையும் மன உறுதியாக செயல்படுத்தச் செய்யும். மார்ச்சு மீ ஆனல் அரசாங்கத்தில் ஓர் நன்மையை உண்டு பண்ணும். பொது நலகாரியங்களை ஏற்று நடத்துதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். பிப்ரவரி 18, 19, 20, 21, 22, 28 மார்ச்சு 1, 2, 3, 6, 7, 10, 11, 12 தேதிகளில் தனுதாயம். தலைமை பொறுப்பு காரியசித்தி ஆகிய நற்பலன்களை ஏற்படுத்தும். பிப்ரவரி 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வரும். ஸ்திரி தனபிராப்தியை ஏற்படுத்தும். நியாயபேச்சு வார்த்தைகளில் சிறு சர்ச்சைவந்து நீங்கும். சகோதரர் விசுவாசத்துடனும் அனுசரணையுடனும் இருந்துவருவர். வீடுவாகனபிராப்தியில் புதிய ஏற்பாடு நடக்கும். எல்லாக்காரியங்களையும் புத்தி சாதுரியமாய் நடத்தச்செய்யும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 14, 15, 21, 22, 23, 24 மார்ச்சு 2, 3, 4, 5, 8, 9, 10 தேதிகளில் தனுதாயம் கௌரவிக்கப்படுதல், பந்து மித்திரர்களிடம் சல்லாபம் ஆகிய நற்பலன் தரும். பிப்ரவரி 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½
(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவருமானங்களை ஏற்படுத்தும்.

வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் உத்தியோகத்தில் நற்பலன் வரும். சகோதரர் பெற்றோர் அம்மாள்களின் நலம் நன்ருக இருந்துவரும். வீடுவாகன அனுபோக பிராப்தியில் நல்ல சௌகரியம்தரும். எல்லாக்காரியங்களும் இஷ்டசித்தியாக நடைபெறும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். பிப்ரவரி 16, 17, 23, 24, 22, 26, 27 மார்ச்சு 4, 5, 6, 7, 11, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 28 மார்ச்சு 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளிள் மத்திம பலன்தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துக்கொண்டிருக்கும். லேவா தேவிகள் கண்யஸ்திதியாக நடக்கும். வித்துவத்துவம். கலைத்துறைகளில் நல்லஸ்திதி ஏற்படும். பசுபால் பிராப்தி திருப்தி யளிக்கும். நவீனபொருள் வாங்குதல் ஆகும். ஞாயிற்றுகிகிழமை சூரியார்ச்சனை செய்ய ஆயாசம் அலைச்சல் நீங்கும். தாரபுத்திரர் களுக்கு சௌக்கியபலன் தரும். பிப்ரவரி 18, 19, 26, 27, 28 மார்ச்சு 1, 6, 7, 8, 9, 13 தேதிகளில் பண ஆதாயம், ஒப்பந்தம் மன சந்துஷ்டி ஆகிய நற்பலன் தரும். மார்ச்சு 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளிள் மத்திம பலன்தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - மதோ ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் கணிசமாக வந்துக்கொண் டிருக்கும். பொன்மணி பூஷணம் தரும். மார்ச்சு 8உ ஆனல் வித்துவத்துவம் கலைத்துறைகளில் விஷேசபலனை ஏற்படுத்தும். உத்தியோக உயர்வு அரசாங்க கௌரவப்பட்டம் இவற்றை யளிக்கும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு தெய்வதரிசனம் கிடைக்கும். தாரபுத்திரர்களின் சௌக்சியம் நன்ருக இருந்து வரும் பிப்ரவரி 16, 17, 21, 22, 28 மார்ச்சு 1, 2, 3, 8, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயம் பிரவிருத்திகளில் நல்ல வாய்ப்பு, மனக் களிப்பு ஆகிய நற்பலன்களையளிக்கும். மார்ச்சு 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ பா. பி. - பு. த. ப, ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும் பாபிவிருத்தியில் நல்ல பண வருமானங்கள் வந்து நிறையும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். மேடை பிரசங்க கீர்த்தியையளிக்கும். எல்லாக் காரியங்களிலும் நற்பல பிராப்தியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 14, 15, 18, 19, 20, 23, 24, 25 மார்ச்சு 2, 3, 4, 5, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். மார்ச்சு 6, 7, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதி களில் மத்திமபலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் வரும். அடிக்கடி அவசிய செலவும் ஏற்படும். இல்லத்தில் பந்துக்களின் வருகை உபசரணை நடக்கும். நல்ல கௌரவம் தரும். மார்ச்சு 4 தேதி ஆனல் புத்தி சாதுரியத்தில் ஏக ஸ்திரப்பொருளில் முதலீடு செய்விக்கும். தாரபுத்திரர்களுக்கு நல்ல ஏற்பாடுகளைச் செய் விக்கும். பிப்ரவரி 14, 15, 16, 17, 21, 22, 25, 26, 27 மார்ச்சு 4, 5, 6, 7, 13 தேதிகளில் தனுயாதி நற்பலன்களை யளிக்கும். மார்ச்சு 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸூ. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும் பாபிவிருத்தில் பண வருமானம் பெருமதிப்பாக வந்துகொண் டிருக்கும். சகோதரருக்கு மேன்மை ஸ்திதியையளிக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் விளம்பரமும்பின் நல்ல அனுபோகம் தரும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். பிப்ரவரி 16, 17, 18, 19, 20, 23, 24, 28, மார்ச்சு 1, 6, 7, 8, 9 தேதிகளில் தானுயாதி நற்பலன்களையளிக்கும். மார்ச்சு 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்ல வாய்ப்பும் செல் வாக்கும் மிகும். சகோதரர் சகோதரிகளில் நலம் நன்ருக இருந்துவரும். வீடு பிராப்தி இயந்திரவாகன பிராப்தியில் நல்லன சௌகரியம் தரும். தாரபுத்திரர்களில் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 18, 19, 20. 21, 22, 26, 27 மார்ச்சு 2, 3. 8, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். பிப்ரவரி 14, 15 மார்ச்சு 13 இத்தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

இறைவர்க்கு அபிஷேகப் பொருள்களின் பயன்கள்.

1.	பால்	...	நீண்ட ஆயுள் அமையும்.
2.	தயிர்	...	நன்மக்கட்பேறு வாய்க்கும்
3.	நெய்	...	வீடுபேறு நல்கும்.
4.	தேன்	...	குரல் இனிமை உண்டாக்கும்.
5.	பஞ்சாமிர்தம்	...	உடல் வலிமை தரும்.
6.	இளநீர்	...	போகம் வழங்கும்.
7.	எலுமிச்சம்பழம்	...	பகையை அழிக்கும்
8.	கரும்பின்சாறு	...	நோய்நீக்கும்.
9.	திருமஞ்சனப்பொடி		கடன், நோய் தீர்க்கும்.
10.	சந்தனத்தைலம்	...	சுகம் தரும்.
11.	விபூதி	...	போகம், மோட்சம் நல்கும்.
12.	பன்னீர்கலந்த சந்தனக்குழம்பு	...	திருமகள்கடாட்சம்உண்டாகும்.
13.	சொர்ணபிஷேகம்		வியாபார லாபம் தரும்.
14.	வலம்புரிச்சங்கம் கலசாபிஷேகம்	...	தீவினைநீங்கி நல்வினைநல்கும். நினைத்தவை நடக்கும்.
15.	புஷ்பம்	...	சந்தோஷம்.
16.	கற்பூரம்	...	அத்வைதமுக்தி.

சிவநாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் - நாட்டைக்குறிஞ்சி] [தாளம் - ஜம்பைகண்டநடை

சதாசிவனை நினைந்திடுவோம்
தஞ்சம் புகுந்தவர் சஞ்சலம் தீர்ப்பவன் (சதா)

1. பதாம் புயத்தன் பணிவார்க் கருள்பவன்
பரமன் அவன்பாரில் பலநாமங் கொள்பவன் (சதா)

2. வைத்திய நாதன் வரந்தரும் நாதன்
வையகத்தில் நல்ல வாழ்வளிக்கும் நாதன் (சதா)

3. கழல் மறவாதவர் கருத்தில் இருப்பவன்
கருணைக் கடலவன் கவலை களைபவன் (சதா)

4. நஞ்சணியும் கண்டன் நல்லவர்க்கு நல்லன்
நாமம் நவில்வார்க்கு நன்மை தருபவன் (சதா)

5. சங்கரன் கங்கையைத் தாழ்சடை வைத்தவன்
தன்னைப் பிலாதவன் தாயாய் அருள்பவன் (சதா)

6. எண்ணுபவர் எண்ணம் ஈடேறச் செய்பவன்
எல்லாங் கடந்தவன் எங்கும் நிறைந்தவன் (சதா)

7. கரியை யுரித்தவன் காமனை எரித்தவன்
காலனைக் காய்ந்தவன் கடைக்கண் பார்ப்பவன் (சதா)

8. திரிபுரம் எரித்தவன் தீவினை தீர்ப்பவன்
சித்தத்தில் வைத்தார்க்குத் தேனு யினிப்பவன் (சதா)

9. உள்ளம் உருகுவார் உள்ளம் உறைபவன்
உமையொரு பாகன் உயிர்க்குயி ரானவன் (சதா)

10. ஈறும் முதலும் இல்லாத இறையவன்
இன்னல் களைபவன் இன்பம் தருபவன் (சதா)

11. வாழ்த்து கின்றவர் வாக்கில் வசிப்பவன்
வணங்கு கின்றவர் வாட்டம் தவிர்ப்பவன் (சதா)

12. பொன்னுர் மேனியில் பூசும்வெண் ணீற்றினன்
போற்றுவார்க்கு அருள் புரிகின்ற புண்ணியன் (சதா)

உ

சிவமயம்

மாசிமாதச் சிறப்பு நாட்கள்

15—2—82 திங்கள், காளாஷ்டமி.

19—2—82 வெள்ளி, காரிநாயனர் குருபூஜை.

21—2—82 ஞாயிறு, பிரதோஷம்.

22—2—82 திங்கள், மகாசிவராத்திரி. மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீகாசி விசுவநாதசுவாமிக்கு மகாபிஷேகம் சீகாழியில் ஸ்ரீ உமாமகேசருக்கு மூன்றும் காலத்தில் புழுகாப்பு.

23—2—82 செவ்வாய், சர்வ அமாவாசை. துவாபரயுகாதி.

24—2—82 புதன், கோச்செங்கட்சோழ நாயனர் குருபூஜை.

27—2—82 சனி, மாசி மக உற்சவாரம்பம்.

1—3—82 திங்கள், தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம்.

2—3—82 செவ்வாய், வேளூர்க் கிருத்திகை.

3—3—82 புதன், வேளூரில் இன்று முதல் மூன்றுதினங்கள் சூரிய பூஜை.

7—3—82 ஞாயிறு, பிரதோஷம். ஆயில்யவிழா. காலை திருஇடும்பாவனம், திருக்கடிக்குளம், மாலை திருவுசாத்தானம் (கோயிலூர்)

8—3—82 திங்கள், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்கு அபிஷேகம். திருவையாறு, திருக்குவளை, கும்பகோணம், கஞ்சனூர், காஞ்சிபுரம் முதலிய திருத்தலங்களில் மகதீர்த்தம். திருக்குவளை நெல்மகோற்சவம்.

9—3—82 செவ்வாய், பௌர்ணமி விரத பூஜை. மாத பூஜையில் கிருதகம்பளம். திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை.

11—3—82 வியாழன், எறிபத்த நாயனர் குருபூஜை.

12—3—82 வெள்ளி, வேளூர் ஸ்ரீ சந்திரசேகரர் உற்சவாரம்பம்.

13—3—82 சனி, சங்கடஹரா சதுர்த்தி. தருமை 17 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் குருபூஜை.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram. Mayuram. 10-2-82